JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர் 14 | இதழ் 07 | செப்டம்பர் 2023 | ஆண்டு சந்தா ₹ 100



# உள்ளே...









# வாலிபர் உலகம்




## 30,000 வாலிபர்கள்

**கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?**

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், **9750955547** என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாகவோ தெரியப்படுத்துங்கள்.

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். Youth.jesusredeems.com என்ற website மூலமாக ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மேலும் தொடர்புக்கு **9750955547**

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

*ஆசிரியர்:* மோகன் சி. லாசரஸ் *இணை ஆசிரியர்:* அவினாஷ்
*ஆசிரியர் குழு:* வயலா I ஜெயசீலன் I ரவி I வில்லியம் I ரேச்சல் I கிளாடிஸ் I சுமா I கெத்சி கிளார்வின் I சதீஷ் I காலேப் I பெனிட்டா I ஜெயா I ஜாய்லின் ஜாண்
*வடிவமைப்பு:* செல்வி I டேவிட்சன்.



# தலைவாசல்

அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

1945 ஆம் ஆண்டு உலகப் போரில் தன்னுடைய அனைத்தையும் இழந்து உருகுலைந்து போன நாடுதான் ஜப்பான். ஆனால் 60 ஆண்டுகள் கடின முயற்சி செய்து அனைத்து துறைகளிலும் எழுச்சி பெற்று திடன்கொண்டு படிப்படியாக தன் பொருளாதாரத்தை உயர்த்தி, கண்டுபிடிப்புகளை அதிகரித்து, சிறந்த சாதனைகளை சாதித்து, சிறப்பான நாடாக திகழ்கின்றது ஜப்பான். டோக்கியோ தான் மிகவும் விலைவாசி அதிகம் உள்ள நகரம் (Most expensive city). ஜப்பான் மக்களுடைய பொருளாதாரத்தை இரண்டு மடங்காக உயர்த்தினால் வர்த்தகத்தை உயர்த்தலாம் என்று யூகித்து கடும் முயற்சி செய்து 10 ஆண்டுகளில், ஜப்பான் மக்களின் பொருளாதாரத்தை இரண்டு மடங்கு உயர்த்த வழிவகுத்தார்கள்.

Education, Military & Economic என்று எல்லா துறைகளிலும் மிகவும் சிறப்பாக செயல்பட்டு, இன்றைக்கு ஒரு Super Power Countryயாக திகழ்கிறது. முழு நாடே அழிந்த போதும், திடன்கொண்டு எழுந்து கட்ட ஆரம்பித்தார்கள். இன்றைக்கு ஒரு வல்லரசு நாடாக ஜப்பான் திகழ்கின்றது.

இதேபோல நம் ஆவிக்குரிய வாழ்விலும் ஒரு வீழ்ச்சி, ஒரு தொய்வு, ஒரு தடுமாற்றம், ஒரு சரிவு ஏற்பட்டு உருக்குலைந்து போய் இருக்கலாம். ஆனால் நீ எழும்பு! நீ திடன்கொள்! நான் உன்னை சீர்படுத்தி, பெலப்படுத்தி, நிலைநிறுத்தி, உறுதிப்படுத்துவேன் என்பதாக ஆண்டவர் சொல்கிறார்.

சத்துரு நம் மேல் இருக்கும் அபிஷேகத்தையும் அழைப்பையும் அறிந்து தான் நம்மை தாக்கிக் கொண்டிருக்கிறான். நாம் கோபுரம் போல் மேலே எழும்பி விடுவோம் என்று எண்ணி ஒவ்வொரு முறையும் சரியும்படி செய்கிறான்.

## ஆனால் வீழ்ந்து போன நீ திடன்கொள்!



காரணம் நீ மறுபடியும் எழும்புவாய்! தேவனுக்காக வல்லமையான காரியத்தை செய்வாய்!

அன்றைக்கு செருபாபேலை, பெலப்படுத்தி திடன் கொள்ள செய்த தேவன்,

இன்றைக்கு உன்னைப் பார்த்து; திடன்கொள்!

கர்த்தருடைய வேலையை நடத்துங்கள்!

என்பதாக சொல்லுகிறார். உன்னுடைய தேவனுக்கு நீ முன்பு செய்த ஊழியத்தை விட,

இனி செய்யப் போகும் ஊழியம் மகிமையாய் இருக்கும்.

வாலிபனே! எழும்பு, தேவனுடைய பணியை புதிய பெலத்தோடு செய்ய,

**அவர் உன்னை திடப்படுத்தி விட்டார்!**



கிறிஸ்துவின் பணியில்

**அவினாஷ்**

சாட்சி தொகுப்பு: பெனிட்டா

# 2 Phone Friends



சகோ. அபிஷாந்த்



**இலங்கை தேசத்தில் இயேசுவை அறிந்த குடும்பத்தில் பிறந்திருந்தாலும் இயேசுவுக்கும் அவருக்கும் எந்த ஐக்கியமும் இல்லாமல்; சினிமா படங்கள் பார்ப்பதில் அடிமைப்பட்டிருந்த அபிஷாந்த் என்னும் வாலிபரை தேவன் விடுவித்து, இன்றைக்கு இலங்கை தேசத்தின் எழுப்புதலுக்காக பாரப்பட்டு ஜெபிக்கும் ஜெப வீரனாக மாற்றியுள்ளார். அவருடனான நேர்காணல் இதோ.**

### உங்கள் குடும்பம் பற்றி சொல்லுங்களேன்?

என்னுடைய பெயர் அபிஷாந்த். நான் இலங்கை தேசத்தில் பிறந்து, அங்கேயே படித்து, குடும்பமாக வசிக்கிறோம். எனது தகப்பனார் வியாபாரம் செய்து வருகிறார். அம்மா அரசு பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து வருகிறார்கள். எனக்கு ஒரு அண்ணன் Engineering Final Year படித்து வருகிறார். எனது தம்பி இப்போது Board Exam எழுதியிருக்கிறார். நான் Software Engineering final year படித்து வருகிறேன். எனது தாயார் கிறிஸ்தவர்களாக இருந்ததால் அவர்கள் எங்களை ஆலயத்துக்கு அழைத்து செல்வார்கள். அதனால் நாங்கள் எல்லோரும் ஆலயத்துக்கு சென்று வருவோம். எங்கள் குடும்பம் இரட்சிக்கப்பட வேண்டுமென்று தினமும் ஜெபிப்பார்கள். என் தாயாரின் ஜெபத்தைக் கேட்டு 2014ஆம் ஆண்டு ஒரு அங்கிள் மூலமாக இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டோம். ஆனாலும் ஜெபவாழ்க்கையும் ஆண்டவரோடு உள்ள உறவும் சரியாக இல்லாமல் இருந்தோம். தினமும் குடும்ப ஜெபம் மட்டும் செய்வது உண்டு.

சகோ. அபிஷாந்த் தன் குடும்பத்துடன்



### சரி, உங்களுடைய அழகான குடும்பத்தைப் பற்றி சொன்னீர்கள்... நீங்கள் வாலிப வயதில் எப்படி இருந்தீர்கள்?

எனது வாலிப பருவத்தில் தினமும் 4 அல்லது 5 படங்களைப் பார்ப்பேன். எனது நண்பர் பார்த்து விட்டு எனக்கு அனுப்பி வைப்பார். அதை நான் அதிகாலை 4

மணி வரை பார்ப்பேன். புது படங்கள் வந்தாலும் முதல் ஆளாக சென்று பார்த்து விட்டு அந்த படத்தின் கதையை எங்கள் இருவரில் யார் முதலில் சொல்லுகிறோம் என்ற போட்டி தான் எங்களுக்குள் இருக்கும். அதைப் பற்றி தான் பேசிக் கொண்டு இருப்போமே தவிர வேறு எந்த பேச்சும் இருக்காது.



**வாலிப வயதில் படம் பார்ப்பதில் அடிமைப்பட்டிருந்த உங்களுக்குள் எப்படி இயேசு வந்தார்?**

சொல்றேன்... 2022ஆம் ஆண்டு நாலுமாவடியில் நடைபெற்ற உலக எழுப்புதல் தரிசன முகாமில் கலந்து கொண்டேன். அந்த முகாமிற்கு வரும் போது கூட ‘‘நேரம் போகவில்லை என்றால், படம் பார்க்கலாம்’’ என்று அநேக படங்களை Download செய்து வைத்திருந்தேன். ‘இரவு நேரங்களில் ஜெபம் நடைபெறவில்லை என்றால் படம் பார்க்கலாம்’ என்று நினைத்து தான் வந்தேன். ஆனால் அந்த முகாம் ஆரம்பித்ததிலிருந்து ஒவ்வொரு வார்த்தையும் என்னோடு பேசியது. முதலில் ‘ஒரே ஜெப சத்தமாக இருக்கிறதே எப்படி 5 நாட்களை கழிப்பது’ என்று வேண்டா வெறுப்பாக இருந்தேன். தேவ வார்த்தையை கேட்க, கேட்க செல்போன் அடிமைதனத்திலிருந்து விடுதலை கிடைக்க வேண்டுமென்று என்னை ஒப்புக் கொடுத்து ஜெபித்தேன். இயேசப்பா என்னோடு பேசி எனக்கு விடுதலை கொடுத்தார். அப்போது அடிமைத் தனத்திலிருந்து கர்த்தர் எனக்கு விடுதலை கொடுத்தார் என்பதை அப்போது புரிந்து கொள்ள முடியவில்லை. முகாம் முடிந்து இரவு தூங்க சென்ற போது, எனக்கு போன் எடுத்து பார்க்க வேண்டுமென்ற எண்ணமே வரவில்லை. படம் பார்ப்பதற்கென்றே நான் ஒரு போன் தனியாக வைத்திருந்தேன். அந்த போனையும் எடுப்பதற்கு ஆண்டவர் என்னை விடவில்லை. அன்றிலிருந்து இன்று வரை எந்த படமும் பார்ப்பதே இல்லை. கர்த்தர் அன்றைய தினம் என் உள்ளத்தில் வந்து விட்டதை உணர்ந்தேன்.

**சூப்பர், கர்த்தர் உங்களைத் தேடி வந்தார்... அதன் பிறகு உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கை எப்படி இருக்கிறது?**

தினமும் 1½ மணி நேரம் தேசத்திற்காக ஜெபித்து வருகிறேன். அதுமாத்திரமல்ல நானும் எனது நண்பனும் தான் போட்டிப் போட்டு படங்களைப் பார்ப்போம். அவன் பெயர் சாருக்ஷ்ன். அவனும் இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமென்று ஜெபித்தேன். அந்த நேரத்தில் இலங்கையில் நடந்த ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்த போது, அவனையும் தேவன் செல்போன் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். இப்பொழுது நாங்கள் இருவரும் ஒன்றாக வேதம் வாசித்து ஜெபிக்கிறோம். இயேசுவை அறிந்து கொள்வதற்கு முன்பு படங்களைப் பற்றி தான் பேசிக் கொண்டிருப்போம். ஆனால் இப்பொழுது வேத வசனங்களைப் பற்றி பேசுகிறோம்.




**சூப்பர்... உங்கள் நண்பர் சாருக்ஷ்னையும் தேவன் இரட்சித்தார்... அவரிடம் கேட்கலாமா? சாருக்ஷ்ன் உங்களைப் பற்றியும், உங்கள் வாழ்க்கையில் வந்த மாற்றத்தைப் பற்றி சொல்லுங்களேன்...**

எனது பெயர் சாருக்ஷ்ன். நான் இலங்கையில் உள்ள மட்டகளப்பு என்ற பகுதியில் வசித்து வருகிறேன். எனது அப்பா ஒரு ஆட்டோ ஓட்டுநர்.

அம்மா வீட்டில் தான் இருக்கிறார்கள். எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள். அபிஷாந்த் என்னுடைய நண்பன். நாங்கள் இருவரும் 18 வருடங்களாக நண்பர்களாக இருக்கிறோம். நாங்கள் பரம்பரை கிறிஸ்தவர்கள் தான். சிறுவயதிலேயே ஞானஸ்நானம் எடுத்திருக்கிறேன். பெயர் கிறிஸ்தவனாக மட்டும் தான் இருந்தேன். நேரம் கிடைக்கும் போது மட்டும் தான் ஆலயத்திற்கு சென்று வருவேன். நான் செல்போனுக்கு அடிமையாக இருந்தேன். ஒரு நாளைக்கு 4 அல்லது 5 படங்கள் பார்ப்பேன். தூங்குகிற நேரம் தவிர்த்து மற்ற நேரங்களில் படங்களைத் தான் பார்ப்பேன். அதுமட்டுமல்லாமல் அந்த படங்களை அநேகருக்கு அனுப்பிப் பார்க்க சொல்வேன். என்னுடைய நண்பன் அபிஷாந்த் நான் அனுப்புகிற படங்களைப் பார்த்து விட்டு தான் தூங்குவான். நான் செல்போனுக்கு அடிமையாகி இருந்ததால் படிப்பில் எனக்கு ஆர்வம் இல்லாமல் இருந்தது. அதனால் தொடர்ந்து படிக்க முடியாமல் போனது.




### சரி சாருக்ஷன்... உங்கள் நண்பர் இயேசுவை ஏற்றுக் கொண்டார்... உங்களுக்கும் இயேசுவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற வாஞ்சை இருந்ததா?

ஆம்... எனது நண்பன் உலக எழுப்புதல் தரிசன முகாமிற்கு சென்று வந்த போது, அவனிடம் பெரிய வித்தியாசத்தைப் பார்த்தேன். அவன் தேவனோடு இருக்கிறதைப் பார்க்கும் போது, எனக்குள் ஒரு வாஞ்சை உருவானது. நானும் தேவனோடு பேச வேண்டும், எனக்கும் சமாதானம் வேண்டும், அடிமைதனத்திலிருந்து விடுதலை வேண்டுமென்று வாஞ்சித்தேன். அந்த நேரத்தில் இலங்கையில் எழுப்புதல் உபவாச ஜெபம் நடைபெறுகிறது என்று கேள்விபட்டு, நான் வாஞ்சையோடு கலந்து கொண்டேன். முதல் நாளிலேயே இயேசுவின் தொடுதலை உணர்ந்தேன். அபிஷேகத்தால் நிரப்பப்பட்டேன். 3 நாட்கள் கூடுகைக்கு போகும் போது மொபைலில் படங்களை download செய்து வைத்திருந்தேன். அங்கு போன பின்பு படம் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஒரு நிமிடம்கூட ஜெபிக்காத நான் முழங்கால்படியிட்டு, காலையிலும் இரவிலும் தினமும் 1½ மணி நேரம் ஜெபிக்கிறேன். அதுமட்டுமல்லாமல் ஒரு குழுவாக இணைந்து தேசத்திற்காக ஜெபித்து வருகிறோம்.

### அபிஷாந்த், வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

''வாலிப வயதில் தான் என்னால் எல்லாவற்றையும் அனுபவிக்க முடியும். ஆகையால் வாலிப வயதில் அனுபவித்து விட்டு, கொஞ்ச நாட்களுக்குப் பிறகு பரிசுத்தமாய் வாழ்கிறேன்'' என்று நினைத்து நம்முடைய வாழ்க்கையை பாவத்திலேயே வாழ்ந்துக் கொண்டிருந்தோமானால், நாம் கைவிடப்பட்டவர்களாக மாறிவிடுவோம். எனவே இன்றைக்கே இரட்சண்ய நாள், இன்றைக்கே எல்லா பாவங்களையும் ஒப்புக் கொடுத்து விட்டு, ஆண்டவரிடம் வரும் போது, இயேசப்பா ''என் அன்பு மகனே(ளே)'' என்று கட்டி அணைத்து சேர்த்துக் கொள்வார். தாமதமின்றி உடனே இயேசுவின் பக்கமாய் வாருங்கள்.

**அன்பான வாலிபர்களே! இலங்கை தேசத்தில் பிறந்து வளர்ந்த வாலிபர்கள் அபிஷாந்த் மற்றும் சாருக்ஷனை பாவ அடிமைதனத்திலிருந்து மீட்டெடுத்து இன்றைக்கு உலக எழுப்புதலுக்காகவும், இலங்கை தேசத்திற்காகவும் உத்திரவாதம் எடுத்து ஜெபிக்கும் நண்பர்களாக தேவன் மாற்றியிருக்கிறார் என்றால், நீங்கள் கூட இன்றைக்கு இப்படிப்பட்டதான அடிமைத்தனத்தில் இருப்பீர்களானால், தேவனிடம் அர்ப்பணித்து கேளுங்கள். தேவன் உங்களையும் விடுவித்து எழுப்புதலில் பயன்படுத்துவார்!**

# வேதாகம புதையல் வேட்டை

கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விக்கு சரியான பதிலை கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுதவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 3 | | | | | |
| | 6 | 8 | 5 | 7 | 2 |
| | | | | | |
| | | | | | |
| 11 | | 9 | | | X |
| | 12 | | | 10 | |
| 4 | | | | | |




## மேலிருந்து கீழ்

2. தண்ணீரை கசப்பாக்கின நட்சத்திரத்தின் பெயர்?
3. விக்கிரகங்கள் நிறைந்த பட்டணம் எது?
5. அழகான பட்டணத்தில் ஏழு நாள் அரசனாக இருந்தவன் யார்
6. 5:2:1 ⟶ 10:4:1 அது என்ன ?
7. தன் வீட்டாரனைவரோடும் ஆண்டவரை விசுவாசித்த ஜெப ஆலய தலைவன் யார்?
8. 30 குமாரர்களை உடைய நியாயாதிபதி யார்?
11. ஆண்டவருடைய வசனம் எதற்கு வெளிச்சம்?

## வலமிருந்து இடம்

1. ஒரே கல்லில் 70 பேரை கொலை செய்தது யார்?
4. பேதையான புறா போல இருப்பவன் யார்?
9. அநீதி நிறைந்த உலகம் எது?
10. எது அந்தரத்தில் தொங்குகிறது?
12. பொய் சொல்லாதது யார்?

## கடந்த மாத வெற்றியாளர்:

சகோ. அருள், (திருநெல்வேலி)

அவர்களை வாழ்த்துகிறோம்.

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.09.2023**

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org


## கடந்த மாத விடைகள்

நிசான் (எஸ்தர் 3:7)
சீப் (1 இராஜா 6:1)
சீவான் (எஸ்தர் 8:9)
நான்காம், ஐந்தாம், ஆறாம் மாதத்திற்கு வேத ஆதாரம் மட்டும் (எரேமியா 39:2; எஸ்றா 7:8,9; ஆகாய் 1:15)
ஏத்தானீம் (1 இராஜா 8:2)
பூல் (1 இராஜா 6:38)
கிஸ்லே (சகரியா 7:1)
தேபேத் (எஸ்தர் 2:16)
சேபாத் (சகரியா 1:7)
ஆதார் (எஸ்தர் 3:7; 3:13)

ஆலோசனை: அலி

Heart Beat

# பயிற்சியும்... முயற்சியும்...






*நான் ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு அப்பா இல்லை, அம்மாவும் மிகவும் வியாதியுடன் இருப்பதால் நான் அவர்களையும் கவனித்துக் கொண்டு அவசர அவசரமாக பள்ளிக்கு செல்ல வேண்டியது இருக்கிறது. காலை 8:30 மணிக்கு ஆரம்பித்தால் மாலை 5:30 மணி வரை நான் பள்ளியில் தான் இருக்கிறேன். என் வீடு மிகவும் தொலைவில் இருப்பதால் 7 மணிக்கு தான் வீட்டிற்கு சென்று என் அம்மாவை கவனிக்க முடிகிறது. பள்ளியில் கொடுக்கிற சம்பளம் எனக்கு போதாததால் வீட்டில் டியூஷன் எடுத்து வருகிறேன். பள்ளியிலும் வீட்டிலும் வேலை பளு அதிகமாக இருப்பதால், என்னால் ஒழுங்காக பள்ளியில் மாணவர்களை கவனிக்க முடியவில்லை. மாணவர்களுக்கு என் மீது சரியான அபிப்பிராயம் இல்லாததினால், Principal வரைக்கும் என்னை பற்றி தவறான புகார்கள் கொடுத்துள்ளனர். எனவே நிர்வாகம் என்னிடம் வேலையை ராஜினாமா செய்யும்படி கேட்டுள்ளது. இதனால் நான் மிகவும் மன அழுத்தத்திற்கு உள்ளாகி உள்ளேன். எனது குடும்பத்திற்கு இந்த வருமானமே அன்றி வேறு எதுவும் இல்லை. நான் இதை எப்படி கையாளுவது? - சேகர்.*

அன்பு தம்பி சேகர்! உங்களின் கடின உழைப்பும், வேலை பளுவும் நன்கு புரிகிறது. ஒரு பக்கம் தாயாரை கவனிக்க முடியாத நிலை, மறுபக்கம் உங்களுடைய ஆசிரியர் பணியை சிறப்பாக செய்ய முடியவில்லையே என்ற வருத்தமும் வேதனையும் உங்களை ஆழ்த்திக் கொண்டிருக்கிறது.

என்னுடைய ஆசிரியர் பணியை பொறுப்பாக செய்ய முடியவில்லையே என்று வேதனைபடும்போது அந்த ஆசிரியர் பணியும் கைவிட்டு போகும் நிலையில் உள்ளது என்று திகைப்பது நன்கு புரிகிறது.

சேகர்! இந்த நெருக்கமான சூழ்நிலையிருந்து நிச்சயமாய் நீங்கள் வெளியே வர முடியும். அதற்கு நீங்கள் சில முயற்சிகளையும், பயிற்சிகளையும் (Efforts & Exercise) செய்ய வேண்டும். எந்த பள்ளியில் மாணவர்களுக்கு சரியாக பாடம் எடுக்க முடியவில்லையோ, அதே பள்ளியில் ஒரு Outstanding teacher மற்றும் First Class ஆசிரியர் என்ற பட்டமும் வாங்க முடியும்.

## முதலில் உங்கள் பணியின் மேன்மையை உணர வேண்டும்

- ஒரு ஆசிரியர் மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் ஆசான் மட்டும் அல்ல, தன்னிடம் பயிலும் மாணவர்களின் திறனையும், ஆற்றலையும் கண்டுபிடித்து, அவர்களை மண்ணுக்குள்ளிருந்து எடுத்து மாணிக்கமாக மாற்றுபவர்கள்.
- ஒரு ஆசிரியரின் கண்டிப்பும், கண்காணிப்பும் ஒரு மாணவனை சிறந்த மாமனிதனாக உருவாக்கும்.
- ஒரு ஆசிரியரின் பாராட்டும், பண்பும் ஒரு மாணவனை விஞ்ஞானியாகவும், விண்வெளி வீரனாகவும் மாற்ற முடியும்.
- இப்படி பல சிறந்த சிற்பங்களை உருவாக்கும் சிறந்ததோர் சிற்பி தான் ஆசிரியர்.
- ஒரு மாணவனின் அறிவு கண்களை மட்டும் திறப்பவர் ஆசிரியர் அல்ல, அந்த கண்களுக்குள் ஒரு ஒளியையும், உயர்வின் சிகரத்தை நோக்கி ஓட செய்யும் உணர்வையும், ஓய்வின்றி ஊட்டும் ஒரு பயிற்சியாளனே ஆசிரியர்.
- இப்படிப்பட்ட ஆசிரிய பணியின் தேவையையும், மேன்மையையும், ஆற்றலையும், வலிமையையும் புரியாததால் தான், இன்றைக்கு பல ஆசிரியர்கள் கஷ்டப்படுகிறார்கள், பல மாணவர்களை கஷ்டப்படுத்துகிறார்கள்.

**எடுக்க வேண்டிய முயற்சி:** உங்கள் மாணவர்களை நீங்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும். அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று அறிய சில முயற்சிகள்

- ஒரு வகுப்பறையில் 50 மாணவர்கள் இருந்தால், அதில் 20% மாணவர்கள் படிக்க விருப்பம் இல்லாதவர்கள்.
- 10% மாணவர்கள் ஆசிரியருக்கு தொல்லைக் கொடுப்பவர்கள்.
- 10% மாணவர்கள் மதில் மேல் பூனை போன்று இப்படியும், அப்படியும் இருப்பார்கள்.
- 20% மாணவர்கள் கற்றுக் கொள்ளும் எண்ணம் உள்ளவர்கள்.
- 30% மாணவர்கள் பாராட்டுவதாலும், பண்பாய் பேசுவதாலும் முன்னேறும் ஆற்றல் உள்ளவர்கள்.
- 10% மாணவர்கள் படித்து முடித்து பெரிய ஆளாக வேண்டும் என்று மிகப்பெரிய லட்சியம் கொண்டவர்கள்.

இப்படி உங்கள் வகுப்பில் உள்ள மாணவர்களை நீங்கள் வகைப்படுத்தி அவர்களின் ஆற்றலை அறிந்து கொள்ள வேண்டும்.

**மேலே கண்ட மாணவர்களின் மனநிலையை அறிந்த நீங்கள், அதற்கேற்றாற்போல் உங்கள் அணுகுமுறையை துவங்க வேண்டும்.**

- 20% – படிக்க விருப்பம் இல்லாதவர்களுக்கு படிப்பில் ஆர்வம் உண்டாக என்ன எந்த முறையை கையாள்வது?
- 10% – தொல்லைக் கொடுக்கும் மாணவனுக்கு என்ன பொறுப்பு கொடுப்பது?
- 10% – மதில் மேல் பூனை போன்றவருக்கு கண்டிப்பையும், கண்காணிப்பையும் செய்வது.
- 20% – கற்றுக் கொள்ளும் எண்ணம் உள்ளவர்களை எப்படி ஊக்கப்படுத்துவது?
- 30% – பாராட்ட வேண்டியவர்களை எப்படி, எப்பொழுது பாராட்டுவது?
- 10% – படிப்பவனை எப்படி கூர்மைப்படுத்தி, முன்னேற உதவுவது?

இப்படி நீங்கள் உங்கள் வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களையும், அறிந்து அவர்களுக்கு ஏற்றபடி பாடங்களையும் பண்புகளையும் போதிக்கும் போது

- மாணவர்கள் மத்தியில் ஒரு மாற்றம் உண்டாகும்.
- யார் உங்களை வேண்டாம் என்று சொன்னார்களோ, அவர்களே நீங்கள் தான் வேண்டும் என்ற சொல்ல கூட வாய்ப்பு உண்டு.

இப்படி சில முயற்சிகளையும், பயிற்சிகளையும் நீங்கள் மேற்கொள்ளும் போது, ஒரு சிறந்த நல்லாசிரியராக மாற வாய்ப்பு உண்டு. வேதப்புத்தகத்திலே ஒரு வசனம் உண்டு, **“தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்” (நீதி. 22:29).** நீங்கள் ஜாக்கிரதையாயிருந்து, உண்மையாய், திறமையாய் செயல்பட்டால் நீங்கள் **Terminate** ஆவதில்லை. மாறாக **Promotion** மேல் **Promotion** பெற்று உயர்ந்திருப்பீர்கள். **Hard work**க்கு பதிலாக **Smart Work** செய்ய முற்படுங்கள். வெற்றி உங்களுக்கு நிச்சயம். ஜெபித்து செயல்படுங்கள்!

மேலும் வேலைப்பளு சற்று அதிகமாக இருந்தால் டியூஷன் எடுப்பதை சில நாட்கள் நிறுத்தி விட்டு வியாதியாய் இருக்கும் உங்கள் தாயாருக்காக ஜெபித்து, அவர்களை அன்போடு கவனியுங்கள். நீங்கள் உங்கள் தாயாருக்காக கருத்தாய் ஜெபிப்பதாலும் அவர்களோடு அதிகமான நேரத்தை செலவிடுவதாலும் அவர்களுடைய உடல் நிலையில் நல்ல மாற்றத்தையும் நீங்கள் காண முடியும்.

**“நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்”** (பிலி. 4:6,7) என்ற வார்த்தையின்படி கர்த்தர் உங்கள் குறைவுகள் அனைத்தையும் நிறைவாய் மாற்றி உங்களை திடன்கொள்ள செய்வார். ஜெபித்து செயல்படுங்கள்!

முகப்பு செய்தி: சதீஷ்




IPL

# திடன்கொள்!

இரண்டாம் உலகப் போரின் போது நாசிகளின் படுகொலை முகாமில் கூட மக்கள் நிம்மதியாக உறங்கினார்கள். எந்த நம்பிக்கை இந்த உறக்கத்தைக் கொண்டு வந்தது என்று அவர்களிடம் கேட்ட போது, ‘‘நாளை நிச்சயம் நல்ல நாளாக இருக்கும் என்ற அவர்களின் உறுதியான நம்பிக்கை பலரையும் உயிர் வாழச் செய்தது. ‘‘விழுவதைவிட ஒரு முறை எழுந்தால் வெற்றி பெறுவாய்’’ என்ற சீனப் பழமொழி உண்டு. உங்கள் கனவை நோக்கி ஓடிக் கொண்டு இருக்கும் போது சில தாமதங்களும் தோல்விகளும் வரும். அதைக் கண்டு சோர்ந்து போகாமல் உங்கள் இருதயத்தை திடப்படுத்தி மனம் தளராமல் இலக்கை நோக்கி ஓட ஆரம்பித்தால் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்.

இந்தியாவின் ஒவ்வொரு தெருக்களிலும், கிரிக்கெட் விளையாடும் அனைவரின் உள்ளத்தின் ஓரத்தில், நாமும் இந்திய கிரிக்கெட் அணியில் சேர்ந்து விளையாட வேண்டும் என்ற எண்ணமும் கனவும் இருக்கும். அப்படிப்பட்ட கனவுகளுடன் தன் கிரிக்கெட் பயணத்தை தொடங்கியவர் தங்கராசு நடராஜன். சேலம் மாவட்டம் சின்னப்பம்பட்டியில் விசைத்தறி தொழிலாளியான அப்பா, ரோட்டோரத்தில் உணவுக்கடை நடத்தி வரும் அம்மா, இப்படி ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த இவர் தன்னுடைய கனவை நோக்கி ஓடுவதில் உறுதியாய் இருந்தார். கடுமையான பயிற்சியால் கிடைக்கிற வாய்ப்புகள் எல்லாவற்றையும் சரியாய் பயன்படுத்தி தமிழ்நாட்டிற்கான ரஞ்சி கோப்பையில் விளையாடி அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார். பெரும் கனவுகளுடன் இருந்த இவருடைய வாழ்வில் இவரின் பந்து வீசும் முறைமை தவறாக உள்ளது என்று சொல்லி கிரிக்கெட் வாழ்விற்கு ஓராண்டு முட்டுக்கட்டை போடப்பட்ட போது, மனம் தாராமல் தன் மனதை திடப்படுத்தி, கடுமையான பயிற்சியில் ஈடுபட்டு, மீண்டும் தன்னுடைய கிரிக்கெட் கனவை நோக்கி நகர ஆரம்பித்தார்.





IPL போட்டிகளில் எல்லோரின் கவனத்தையும் ஈர்த்து, இந்திய அணியில் இடம் பெற்று ஒரே சுற்றுப் பயணத்தில் மூன்று விதமான சர்வதேச போட்டிகளிலும் அறிமுகமான முதல் இந்திய கிரிக்கெட் வீரர் ஆனார். அதற்குப் பின்பு இந்திய அணியில் தொடர்ந்து வாய்ப்புகள் கிடைக்காத போதிலும் சோர்ந்து போகாமலும், மனம் தளராமலும் தன்னுடைய சொந்த கிராமத்தில் கிரிக்கெட் மைதானத்தை உண்டாக்கி நல்ல தரமான விளையாட்டு வீரர்களை உருவாக்கி வருகிறார். நம்முடைய கனவுகளும் திட்டங்களும் நிறைவேறாத பட்சத்தில் இருதயம் சோர்ந்து திடனற்று போய் விடுகிறது. அடுத்தது என்ன செய்ய வேண்டும் என்று யோசித்து செயல்பட முடியாத அளவிற்கு நம்முடைய பெலனையும் நம்பிக்கையும் இழந்து விடுகிறோம். உங்களைச் சுற்றி பலவிதமான போராட்டங்கள், நெருக்கங்கள், பொருளாதாரப் பிரச்சனைகள், எதிர்கால பயங்கள் வரும் போது பெலன் குன்றி போகாதீர்கள். **“...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்” (யோவான் 16:33)** என்று சொன்ன இயேசுவை விசுவாசித்து திடமனதாய் இருங்கள், அவர் உங்கள் காரியங்களை வாய்க்கச் செய்வார்.

எருசலேமில் ஆலயத்தைக் கட்டும்படி கோரேஸ் ராஜாவால் அனுப்பப்பட்ட குழு, செருபாபேல் தலைமையில் சுமார் 900 மைல்கள் பிரயாணம் செய்து ஆலயக் கட்டுமானப் பணியை எருசலேமில் ஆரம்பித்தார்கள். தேவாலயத்திற்கான அஸ்திபாரம் போடப்பட்டு, கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுகிறார்கள் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட சத்துருக்கள் **“...யூதா ஜனத்தின் கைகளைத் தளரப்பண்ணி, கட்டாதபடிக்கு அவர்களைச் சங்கடப்படுத்தி,” (எஸ்றா 4:4)** அவர்கள் யோசனையை அபத்தமாக்கும்படி காரியங்களைச் செய்தனர். ஏறக்குறைய 16 வருடங்கள் ஆலய கட்டுமான பணி தடைப்பட்டது. இதனால் ஆலய கட்டுமான பணியை ஆரம்பித்த அநேகர் சோர்ந்து போய் விடாய்த்து விட்டார்கள். அடுத்து என்ன செய்ய போகிறோம் என்று அவர்கள் செயல் இழந்து போய், ‘‘கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு ஏற்ற காலம் வரவில்லை’’ என்று காத்திருந்தார்கள். அப்பொழுது ஆண்டவர் ஆகாய் தீர்க்கதரிசி மூலமாக செருபாபேலின் இருதயத்தையும், கைகளையும் தளரவிடாமல் திடப்படுத்தி, ஆலய கட்டுமானப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கச் செய்தார். தன்னுடைய வாழ்வில் எதிர்ப்புகளும், போராட்டங்களும், மனிதர்களால் சூழ்ச்சிகளும் வந்த போதும் செருபாபேல் சோர்ந்து போகவில்லை. **“துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்; அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும்” (சங்கீதம் 112:7)** என்ற ஆண்டவரின் வார்த்தையின்படி செருபாபேல் திடமனதாயிருந்து ஆலயத்தைக் கட்டுவித்தான்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களைக் கொண்டு, என்னவெல்லாம் செய்ய தீர்மானித்து இருக்கிறாரோ, அதை கட்டாயம் செய்து முடிப்பார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. உங்கள் வாழ்வில் போராட்டங்களும், இன்னல்களும் வரும் போது சோர்ந்து போகாமல், விழிப்போடு திடன் கொண்டு தைரியமாயிருந்து, கர்த்தர் என்னோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையுடன் இருதயத்தை தளரவிடாமல், நீங்கள் முன்னேறி செல்லும் போது நிச்சயம் வெற்றி பெறுவீர்கள்.

எனக்கன்பான வாலிபர்களே! உங்களுடைய நிகழ்காலத்தை வைத்து எதிர்காலத்தைக் குறித்து பயப்படாதீர்கள். இக்கட்டான உங்கள் சூழ்நிலையை மாற்ற வல்ல தேவனுடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும் நோக்கிப் பாருங்கள், “...உங்கள் கைகளை நெகிழவிடாமல் திடன்கொள்ளுங்கள்; உங்கள் கிரியைகளுக்குப் பலன் உண்டு” (2 நாளா. 15:7) என்று கர்த்தர் சொல்கிறார். செருபாபேலின் வாழ்வில் எதிர்மறையான காரியங்கள் நடக்கும் போது அவன் மனம் தளராமல் கர்த்தரை நம்பி இருந்து, காரியங்களை அனுகூலமாக மாற்றினான். உங்கள் சூழ்நிலைகளைப் பார்த்து, சோர்ந்து போகாமல், “...நீங்கள் திடமனதாயிருந்து காரியங்களை நடத்துங்கள்...” (2 நாளா. 19:11) கர்த்தர் உங்களோடு இருந்து வெற்றிகளைத் தருவார்!



சாதனை: சுமா



# 50 பைசாவில் ஆரம்பம்!

இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். அநேக போராட்டங்கள் நிறைந்தது தான் வாழ்க்கை. போராட்டங்கள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. நமது வாழ்வில் வரும் ஒவ்வொரு போராட்டங்களும் நமக்கு ஏதோ ஒரு பாடத்தைக் கற்பித்துக் கொண்டுதான் இருக்கின்றன. அந்த ஒவ்வொரு பாடங்களும் நம்மை சாதிக்கத் தூண்டுகின்றன. பல போராட்டங்களை சந்தித்து அது கற்றுத் தந்தப் பாடத்தை புரிந்து கொண்டு வெற்றிப் பெற்ற சாதனையாளரின் வாழ்க்கை பாடம் உங்களுக்காக.

பெட்ரிசியா தாமஸ்ஸின் வாழ்க்கை இளமைக் காலத்தில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. தன்னுடைய 17-ம் வயதில் நாராயணன் என்ற நபரை திருமணம் செய்துக் கொண்டார். ஆரம்பத்தில் சந்தோஷமாக ஆரம்பித்த திருமண வாழ்க்கை கொஞ்ச வருடங்களிலேயே மிக மோசமாக மாறியது. கணவர் போதை பழக்கத்திற்கு அடிமையானவர் என்பதை அறிந்து மிகவும் மன வேதனை அடைந்தார். இதனால் குடும்பத்தை நடத்த போதுமான பணமும் இல்லை, ஆதரவும் இல்லை, படிப்பும் இல்லை, எந்தவொரு வேலையும் தெரியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் என்ன செய்வது என்று திகைத்து நின்ற போது, வீட்டிலேயே ஊறுகாய், ஜாம் தயாரித்து விற்கத் தொடங்கினார். வியாபாரம் வளர்ந்து பெருகியது. இதனால் 1982 ஆம் ஆண்டு மெரினாவில் சிறியதாக ஒரு தள்ளுவண்டிக் கடையை ஆரம்பித்து டீ, காபி, பஜ்ஜி, போண்டா, சமோசா போன்றவற்றை செய்து விற்பனை செய்யத் தொடங்கினார். முதல் நாளில் சரியான விற்பனை ஆகவில்லை. வெறும் 50 பைசா மட்டும் இலாபம் கிடைத்தது. இதனால் சோர்ந்துப் போகாத பெட்ரிசியா தொடர்ந்து கடினமாக உழைக்கத் தொடங்கினார்.

பெட்ரிசியாவின் கடின உழைப்பால் தள்ளுவண்டிக் கடை பல நிறுவனங்களில் கேன்டின்களாக மாறியது. படிப்படியாக முன்னேறத் தொடங்கினார். இப்படி பெட்ரிசியாவின் வாழ்க்கை மகிழ்ச்சியாக போய்க் கொண்டிருந்த போது, சற்றும் எதிர்பார விதத்தில் இவரின் மகள் மற்றும் கணவர் விபத்தில் உயிரிழந்தனர். இதனால் மிகவும் மனம் உடைந்து போனார். சிறிது கால ஓய்வுக்குப் பிறகு தன்னை ஊக்குவித்துக் கொண்டு முன்போல களத்தில் இறங்கினார். தனது மகள் விபத்தில் சிக்கியபோது ஆம்புலன்ஸ் உதவி கிடைக்காததால், மரணமடைந்தாள் என்பதால், அந்தப் பகுதியில் ஆம்புலன்ஸ் சேவையைத் தொடங்கினார்.




இதை வாசிக்கும் நண்பர்களே !
பெட்ரிசியாவின் வாழ்க்கை முட்கள்
நிறைந்த பாதையாகத் தான்
இருந்தது. ஆனால் அந்த பாதையில்
போராடி வெற்றிப் பாதையாக
மாற்றியுள்ளார். உங்கள் வாழ்க்கையில்
உள்ள போராட்டங்களை சவாலாக
எடுத்துப் போராடி வெற்றி
காணுங்கள்.
வாழ்க்கை வாழவே !!!

தன் மகள் நினைவாக ''சந்தீபா ரெஸ்டாரண்ட்'' என்ற உணவகம் தொடங்கினார். தற்போது ரெஸ்டாரண்டில் 200க்கும் மேற்பட்ட நபர்கள் வேலை செய்து வருகின்றனர். வெறும் 50 பைசா லாபத்தில் தொடங்கிய இவரது வியாபாரம் இன்று ஒரு நாளைக்கு 2 லட்சத்துக்கும் மேல் வருமானம் ஈட்டி வருகின்றது. 2010ஆம் ஆண்டு சிறந்த தொழில் முனைவோருக்கான விருதை இந்திய வர்த்தக தொழில்துறை கூட்டமைப்பு (FICCI) வழங்கியது.




# எழுப்புதல் முழு இரவு ஜெபம்

**புதுக்கோட்டையில்...**

**நாள்: செப்டம்பர் 08,**
**வெள்ளிக் கிழமை**

**நேரம் : இரவு 9 மணி முதல்**
**அதிகாலை 4 மணி வரை.**

**இடம்: கிறிஸ்து சுகமளிக்கும் சபை,**
**பால்ராஜ் நகர், கீரனூர்,**
**திருச்சி புதுக்கோட்டை**
**பைப்பாஸ் ரோடு.**

**தொடர்புக்கு: 94897 75075**
**98432 61581**

**தாராபுரத்தில்...**

**நாள்: செப்டம்பர் 17,**
**ஞாயிற்று கிழமை**

**நேரம் : இரவு 9 மணி முதல்**
**அதிகாலை 4 மணி வரை.**


**இடம்: பிஷப் தார்ப்**
**கல்லூரி வளாகம்.**
**பெத்தேல் சர்ச் அருகில்**
**தாராபுரம்.**

**தொடர்புக்கு : 82482 83373**



**தேவ செய்தி:**
**சகோ. சதீஷ்குமார்.**

செய்தி: மோகன் சி. லாசரஸ்



# மகிழ்ச்சியாயிருங்கள்!



**“மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன்” (பிரசங்கி 3:2)** என்று சாலொமோன் சொல்கிறார். இந்த உலகத்தில் மனிதன் வாழ்கிற காலத்தில் மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வதும்தான், தேவன் மனிதனுக்கு வைத்திருக்கிற நன்மையான காரியங்கள்!

நீங்கள் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும்! இதுதான் தேவன் உங்களுக்கு வைத்திருக்கும் நன்மை. நாம் சந்தோஷமாக, மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றே ஆண்டவர் விரும்புகிறார். வாலிபர்களைக் குறித்து ஆண்டவர் பேசும்போது; **“வாலிபனே! உன் இளமையில் சந்தோஷப்படு...” (பிரசங்கி 11:9)** என்று சொல்கிறார்.


நாம் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே, தேவன் தம்முடைய சாயலில் நம்மை உண்டாக்கினார். மகிழ்ச்சியாயிருப்பதுதான் தேவன் நமக்கு வைத்திருக்கும் நன்மை! **“கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்” (பிலி.4:4).** நாம் எப்பொழுதும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கத்தான் ஆண்டவர் நம்மை இரட்சித்து அவருடைய பிள்ளைகளாக மாற்றியிருக்கிறார்.

இன்றைக்கு ‘‘நான் இரட்சிக்கப்பட்டேன், அபிஷேகம் பெற்றேன்’’ என்று சொல்லும்போது எத்தனைபேர் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள்? அநேகரிடம் தனியாகப் பேசிப் பார்த்தால், ‘‘என்ன வாழ்க்கை இது, எனக்கு யார் இருக்கிறார்கள், ஏன் இந்த உலகத்தில் வாழ வேண்டும்’’ என்று சந்தோஷமில்லாமல் பேசுகிற மக்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள்.’’ஆண்டவர், எங்களை சந்தோஷமாக வைத்திருக்கிறார், ஆண்டவர் எங்களுக்கு ஒரு குறையும் வைக்கவில்லை’’ என்று சந்தோஷமாக சொல்கிறவர்கள் வெகு சிலர்தான். நீங்கள் மகிழ்ச்சியாய் இருக்கும்போது என்ன நடக்கும்?

## அற்புதங்களைக் காண்பீர்கள்!

**“பயப்படாதே, மகிழ்ந்துகளிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்...” (யோவேல் 2:21).** கர்த்தர் உங்களுக்குப் பெரிய காரியங்களை செய்வார், அதன்பிறகு மகிழ்ந்து களிகூருங்கள் என்று வேதம் நமக்குச் சொல்லவில்லை. முதலாவது, ‘‘மகிழ்ந்து களிகூருங்கள், அப்பொழுது கர்த்தர் உங்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்வார்’’ என்றுதான் தேவனுடைய வார்த்தை கூறுகிறது. ‘‘மகிழ்ந்து களிகூர்ந்தால், நான் பெரிய காரியங்களைச் செய்வேன்’’ என்று ஆண்டவர் சொல்லக் காரணம் என்ன? பிரச்சனைகள், போராட்டங்கள், வியாதிகளின் நடுவில் நாம் கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூரும்போது, ஆண்டவர் மீது வைத்திருக்கிற விசுவாசத்தை நாம் வெளிப்படுத்துகிறோம். அதுதான் உண்மையான விசுவாசம்.

பவுலும், சீலாவும் சிறைச்சாலையில் அடித்துக் காயப்படுத்தப்பட்டு, கை, கால்கள் அசைக்க முடியாத நிலையில் மரத்தோடு இணைக்கப்பட்டிருந்தபோதும் நடுராத்திரியில் ஜெபம் செய்து, தேவனைத் துதித்துப் பாடினார்கள். அவர்கள் சிறைச்சாலையில் கண்ணீரின் ஜெபம் செய்யவில்லை, கெஞ்சுதலின் ஜெபம் செய்யவில்லை. அவர்கள் தேவனைத் துதித்துப் பாடினார்கள். மகிழ்ச்சி இருந்தால்தானே பாட முடியும்?





உள்ளத்தில் சந்தோஷம் இருந்தால்தான் மகிழ்ச்சியுடன் பாட முடியும். பவுலும் சீலாவும் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டபோது, ''இயேசு கிறிஸ்துவும் இந்தச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். அவர் எங்களுடன் இருக்கிறார்'' என்று விசுவாசித்தார்கள். அதனால்தான் கர்த்தரை மகிழ்ச்சியுடன் பாடினார்கள். அதனால்தான் கட்டுகள் தெறிபட்டு போயின, அற்புதங்களைக் கண்டார்கள். நீங்களும் கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூர வேண்டும். 'இயேசு எப்போதும் என்னோடே இருக்கிறார்' என்கிற சந்தோஷம் மகிழ்ச்சி, களிகூருதல் உங்களுக்குள் இருக்க வேண்டும். அப்பொழுது அற்புதங்களை காண்பீர்கள்.

## வேண்டுதல்களை அருள் செய்வார்!

**"கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்" (சங்.37:4).** உங்கள் இருதயத்தின் வேண்டுதல்களை ஆண்டவர் அருள் செய்ய வேண்டுமானால், முதலில், கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிருக்கப் பழகுங்கள்.

வேதத்தில் அன்னாள் என்ற பெண் கர்த்தர் தனக்கு ஒரு குமாரனை கொடுக்கும்படி அழுது விண்ணப்பம் செய்தாள். அதைக்கண்ட ஏலீ **"சமாதானத்துடனே போ; நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்குக் கட்டளையிடுவாராக"** என்றான்.

இதற்கு பிறகு அன்னாள் துக்கமுகமாயிருக்கவில்லை என்று 1 சாமு 1:17, 18ம் வசனங்களில் வாசிக்கிறோம். தேவனிடத்தில் வேண்டுதல் செய்து அவர் பாதத்தில் தன் பாரத்தை இறக்கி வைத்த பிறகு அன்னாள் துக்கமுகமாய் இருக்கவில்லை. அப்படியானால் அவள் வேண்டிக்கொண்டதை கர்த்தர் நிச்சயம் தருவார் என்று விசுவாசித்து கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூர்ந்திருப்பாள். எனவே ஆண்டவர் அவள் வேண்டுதலை அருள் செய்தார்.



இன்று, அநேக தேவப் பிள்ளைகளுடைய உள்ளத்தில் மன மகிழ்ச்சியில்லை. காரணம் அவர்கள் ஆண்டவருடைய சமூகத்தில் அன்னாளைப் போல் அமர்ந்து அவரோடு பேசுவதேயில்லை. அவருடைய சமூகத்தில் அமர்ந்து அவரிடத்தில் மனந்திறந்து பேசிப் பாருங்கள். அவர் உங்களைச் சந்தோஷப்படுத்துவார். கர்த்தருக்குள் நீங்கள் மனமகிழ்ச்சியாயிருந்தால், நீங்கள் விரும்புகிறதை அவர் நிறைவேற்றுவார். ஆண்டவரோடு நாம் பேசுவது, ஒரு தகப்பன் மகன் உறவு, அவர் எங்கோ சிங்காசனத்தில் அமர்ந்துகொண்டு, ஒரு பொம்மையை ஆட்டுவிப்பதுபோல, நம்மை ஆட்டுவிப்பவர் அல்ல. நம் அருகில் வந்து, நம்மோடு பேசுகிற ஒரு நல்ல தகப்பன். அவர் நம்மை எப்பொழுதும் சந்தோஷப்படுத்த விரும்புகிறார். இயேசுவின் பாதபடியில் போய் அமர்ந்து அவரோடு பேசி மகிழுங்கள் அவர் உங்களோடு பேசுவார்! உங்கள் வேண்டுதல்களை அருள் செய்து உங்களைச் சந்தோஷப்படுத்துவார்!

**அன்பான வாலிபர்களே! "கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்" (நெகேமியா 8:10) என்று வேதம் சொல்லுகிறது. நாம் வாழும் இந்த இம்மைக்குரிய வாழ்வில் பாடுகள், சோர்வுகள், பெலவீனங்கள், நிந்தை மற்றும் அவமானங்களை கொண்டு வந்து நம்முடைய மகிழ்ச்சியை கெடுத்துப் போட பிசாசு வகை பார்ப்பான். ஆனால் நாம் எப்பொழுதும் கர்த்தருடைய சமூகத்தில் மகிழ்ந்து களிகூரும்போது, அவர் தம்முடைய தெய்வீக பெலனால் நம்மை நிறைத்து வழிநடத்த போதுமானவர்!**

வேதாகம கதாபாத்திரம்: ஜாய்லின்

# கிதியோன்



வாசிக்க: நியாயாதிபதிகள் 6 – 8 அதிகாரங்கள்

**யோசுவாவிற்கு பிறகு ஒத்னியேல், ஏகூத், சம்கார், தெபொராள் என பல நியாயாதிபதிகளை தேவன் எழுப்பினார். கடந்த 4 மாதங்களாக 4 நியாயாதிபதிகளைப் பற்றி பார்த்தோம். இந்த மாதம் 5வது நியாயாதிபதியாகிய கிதியோனைப் பற்றி பார்க்கப் போகிறோம்.**

## அறிமுகம்

**கிதியோன் என்றால் 'வெட்டுபவர்' அல்லது 'தாக்குபவர்' என்று பொருள். இவர் ஒப்ராவைச் சேர்ந்தவர். தந்தையின் பெயர் யோவாஸ். இவர் பாகால்களின் தோப்பை வெட்டி வீழ்த்திய போது, யெருபாகால் என்று தன் தந்தையால் மறு பெயரிடப்பட்டவர். அழைப்பின் காலத்தில் மிகவும் தாழ்மையுள்ளவராக நடந்து கொண்டார். பயமிருந்த போதிலும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து பாகாலின் பலிபீடத்தையும், தோப்பையும் இரவோடு இரவாக அழித்தார். கர்த்தரிடம் அடையாளம் கேட்டு, இஸ்ரவேலை தன் கையினால் இரட்சிக்க தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.**





### நற்பண்புகள்

- பிரச்சனையை உருவாக்கிய எப்பிராயீமரை கனிவான மொழியால் சமாளித்தார்.
- எள்ளி நகையாடிய அந்நியருக்கு முள்ளுகளால் பாடம் கற்பித்தார்.
- வெற்றி அடைந்தாலும் அரசனாக பதவி ஏற்க மறுத்தார்.
- தன்னை வழிநடத்தியவர்கள் வழிமாறிய போதும் கிதியோன் வழி மாறவில்லை.

### படையெடுப்பும், வெற்றியும்

- கிதியோனும் அவனோடிருந்த 100 பேரும் பாளையத்தின் முன்னணியில் வந்து எக்காளங்களை ஊதி, தங்கள் கையிலிருந்த பானைகளை உடைத்தனர். அதேபோல் மற்றவர்களும் ஏக்காளங்களை ஊதி, பானைகளை உடைத்து உரத்த சத்தமாக ஆர்ப்பரித்தார்கள். அப்பொழுது கர்த்தர் பாளயமெங்கும் ஒருவர் பட்டயத்தை ஒருவருக்கு விரோதமாக ஓங்கப்பண்ணினார்
- கையில் பட்டயம் எடுக்காமல் தீவட்டிகளையும், பானைகளையும், எக்காளங்களையும் ஏந்திய 300 பேருடன் பெரிய படையை எதிர்த்து வெற்றி கண்டார்.
- பயந்த சுபாவத்தால் கோழையாக இருந்த, கிதியோனோடு கர்த்தர் பேசிய போது, அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிந்ததினால் 1 லட்சத்து 35 ஆயிரம் பேரை வெல்ல தேவன் பெலன் கொடுத்தார்.




### பலவீனங்களும், தோல்விகளும்

- தேவனுடைய ஆலோசனையின்றி செயல்பட்டு, கொள்ளையிடப்பட்ட பொருள்களை ஏபோத்தாக மாற்றினார். பொன்னினால் செய்த ஏபோத்தை இஸ்ரவேலர்கள் வணங்கி சோரம்போக வழி உண்டாக்கினார்.
- இந்தக் காரியம் கிதியோனுக்கும் அவன் வீட்டாருக்கும் கண்ணியாயிற்று.

வேதாகம தேசங்கள்: கெத்சி கிளார்வின்

# கோசேன் தேசம்



அன்பு வாலிபர்களே! வேதாகம தேசங்கள் என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள சில தேசங்களையும் அதன் சிறப்புமிக்க பட்டணங்களையும் குறித்து பல சுவாரஸ்யமான தகவல்களை நீங்கள் வாசித்து அறிந்து வருகிறீர்கள்! தொடர்ந்து இம்மாதம் நாம் பார்க்கவிருக்கும் தேசத்தின் பெயர் "கோசேன்".

## அறிமுகம்:

- கோசேன் எகிப்திலுள்ள தேசங்களில் ஒன்றாகும்.
- கர்த்தர் வாக்குப்பண்ணின கானானுக்கு பிரவேசிக்கும் முன் இஸ்ரவேலர்கள் கோசேன் தேசத்தில் குடியிருந்தனர் என்பது நாம் அறிந்ததே.
- இந்த தேசத்தை இஸ்ரவேலர்களுக்கென முன்பு கொடுத்தவர் யோசேப்பு ஆகும். ஆம்! பஞ்சத்தில் ஆகாரம் வேண்டி வந்த தன் உறவினர்களுக்கு எகிப்தில் பார்வோனுக்கு நிகராய் உயர்த்தப்பட்டிருந்த யோசேப்பின் தயவினால் கிடைத்த இந்த தேசமே கோசேன் ஆகும்.
- மோசேயின் காலத்தில் கோசேனில் வசித்து வந்த இஸ்ரவேல் மக்களை அடிமைப்படுத்திய எகிப்தின் ராஜ்ஜியத்தை தேவன் நியாயந்தீர்த்ததால் இந்த தேசம் அவர்களுக்கு ஒரு பரிசுத்த ஸ்தலமாக இருந்தது.

## சிறப்பம்சங்கள்:

- கோசேன் பகுதி ''நிலத்தின் மிகச் சிறந்தது'' என்று விவரிக்கப்பட்டுள்ளது. (ஆதி. 47:6)
- ஏனெனில் இது நைல் நதியின் பல்வேறு பகிர்வுகளால் நீர்ப்பாய்ச்சலுண்டான செழிப்பான தேசமாகும்.
- இது பயிர் வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்புக்கு ஏற்ற ஒரு இடமாக இருந்தது.

தற்காலத்தில், கோசேனை துல்லியமாக அடையாளம் காண முடியாவிட்டாலும், பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள் இது கெய்ரோவுக்கு வடக்கே தற்போதைய ஜகாசிக் (Zagazig) நகரத்திற்கு அருகில் இருந்திருக்கக்கூடும் என்று கூறுகின்றனர். இன்றளவும் ஏற்றுமதிக்கான தானியங்கள் மற்றும் பருத்திகள் இப்பகுதியில் அதிகம் பயிர் செய்யப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

அன்பு வாலிபர்களே! எந்த சகோதரர்கள் பொறாமையினால் யோசேப்பை குழிக்குள் போட்டு விற்றுப்போட்டார்களோ, அதே சகோதரர்களுக்கு இன்றளவும் வளமாய் உள்ள தேசத்தை பரிசளித்துள்ளார் யோசேப்பு. தனக்கு தீங்கு இழைத்தவர்களுக்கு நன்மையினால் பதில் அளித்த யோசேப்பின் இருதயம் உங்களுக்குள் இருக்கின்றதா?

**"நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு." (ரோமர் 12:21)**



# வாலிபர் எழுப்புதல் கூடுகை!

(நாகப்பட்டினம், மயிலாடுதுறை, செங்கல்பட்டு, திருவேங்கடம், திருவனந்தபுரம்)







தேவ தரிசனம் நிறைவேற மாவட்டங்கள் தோறும், தாலுக்காக்கள் தோறும் சுவிசேஷம் அறிவிக்க வாலிபர்களை எழுப்ப திட்டம் கொடுத்து, அதன்படி அநேக மாவட்டங்களுக்குள் கிராமங்களுக்குள் சென்று வாலிபர் எழுப்புதல் கூடுகை நடத்த தேவன் கிருபை பாராட்டி வருகிறார். ஒவ்வொரு மாதமும் அநேக மாவட்டங்களில், தாலுக்காக்களில் கூடுகை நடத்தி வாலிபர்களை சுவிசேஷம் அறிவிக்கவும், ஜெபிக்கவும் உற்சாகபடுத்த தேவன் கிருபை செய்தார். கடந்த ஜூலை மாதம் நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் செங்கல்பட்டில் நடைபெற்ற கூடுகைகளில் சுமார் **1,596** வாலிபர்கள் கலந்து கொண்டு எழுப்புதல் தரிசனத்தைப் பெற்று, சுவிசேஷம் அறிவிக்கவும் ஜெபிக்கவும் தேவ ஆலோசனையும் அபிஷேகத்தையும் பெற்று சென்றனர். அதுமட்டுமல்லாமல் சுமார் **32,000** கைப்பிரதிகளை பெற்றுக்கொண்டு, அவரவர் கிராமங்களில் சென்று கைப்பிரதி ஊழியம் செய்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்வோம் என்ற தரிசனத்தோடு கடந்து சென்றிருக்கின்றனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

















சிந்தனை சிதறல்:
பெனிட்டா

# திடமனதாக இருந்தவர்கள்...



யோபு

பல துன்பங்களையும், இழப்புகளையும் அனுபவித்த யோபு, தேவன் மேல் கொண்ட நம்பிக்கையில் தளர்ந்து விடவில்லை. ஒரேநாளில் சகல சம்பத்தையும் இழந்தார். தனது மனைவியைத் தவிர 10 பிள்ளைகளையும் ஒரே நேரத்தில் இழந்தார். கண் இமைக்கும் நேரத்தில் இவர் வாழ்வு தலைகீழாக மாறியது. சரீரம் முழுவதும் பருக்களால் வாதிக்கப்பட்டு, ஒரு ஓட்டினால் தன்னை சுரண்டிக் கொண்டிருந்தார். மனைவி தூஷித்தாள், நண்பர்களோ அவர் கொடிய பாவம் செய்தார் என்று பேசினர். ஆனாலும் 'தேவனிடத்திலிருந்து நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று உத்தமத்தோடு திடமனதாக இருந்தார். யோபு மனிதர்களுடைய ஆலோசனையைக் கேட்கவில்லை. தேவனோடு மாத்திரம் தனிப்பட்ட முறையில் உறவு வைத்திருந்ததால் யோபு சோர்ந்து போகவில்லை. யோபு தன்னுடைய கடைசி நாட்களில் இரட்டத்தனையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார் என்று வேதத்தில் நாம் படிக்க முடிகிறது **(வாசிக்க: யோபு 13:15-18; 23:8-17).**

அன்பான வாலிபர்களே! யோபு திடனற்று சோர்ந்து போக வேண்டுமென்று சாத்தான் பல சூழ்நிலைகளைக் கொண்டு வந்த போதும், கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து திடமனதோடு எல்லாவற்றையும் சகித்தார். ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார். நீங்களும் கூட எல்லாவற்றையும் இழந்து திடனற்று போய் இருக்கிறீர்களா? கர்த்தர் மீது நம்பிக்கை வையுங்கள், அவர் உங்களை திடப்படுத்துவார்!

பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்ற ஸ்தேவான் சுவிசேஷத்தை தைரியமாக பேசியதால், அவர் பேச்சைக் கேட்டவர்களெல்லாம் இயேசுவை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தனர். கிறிஸ்தவம் வேகமாக வளர ஆரம்பித்தது. ஸ்தேவானைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் பேசினார்கள். 'மோசேக்கு எதிராகவும் தேவனுக்கு எதிராகவும் பழி சொல்கிறான்' என்று மக்களிடம் புரளியைக் கிளப்பினார்கள். அதை நம்பிய மக்கள் ஸ்தேவானை தலைமைச் சங்கத்தில் நிறுத்தினார்கள். அப்பொழுது அவருடைய முகம் தேவதூதருடைய முகத்தை போலிருந்தது. பிரதான ஆசாரியன் ஸ்தேவானிடம் இது உண்மையா என்று கோபமாக கேட்டதும், ஸ்தேவான் 'இது நல்ல சந்தர்ப்பம்' என்று அங்கும் பெரிய பிரசங்கத்தை பண்ணினார். கடிந்து கொண்டு பேசினார். எல்லோரும் கோபத்தில் பல்லை நறநற வென்று கடித்தார்கள். இதோ வானம் திறந்திருக்கிறது. மனுஷகுமாரன் தேவனுடைய வலது பக்கம் நிற்கிறதையும் பார்க்கிறேன் என்று சொன்னதும், அவரை பிடித்து ஊருக்கு வெளியே கொண்டு போய் கல்லெறிந்து கொன்றார்கள். (வாசிக்க: அப். 6:8-15; 7:1-60).

ஸ்தேவான்



அன்பான வாலிபர்களே! சுவிசேஷம் அறிவித்தால் கல்லெறிந்து கொல்வார்கள் என்று ஸ்தேவான் அறிந்திருந்தும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு கடைசி மூச்சு வரை சுவிசேஷம் அறிவித்துக் கொண்டு இரத்த சாட்சியாக மரித்தார். வாலிபனே! நீ திடமனதோடு, தைரியமாக சுவிசேஷம் அறிவிக்கிறாயா?



# திடனற்றவர்கள்...

## 12 உளவாளிகள்

தேவன் மோசேயிடம், 'ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அதில் 12 பேரை கானான் தேசத்திற்கு உளவு பார்க்க அனுப்பு, அந்த தேசத்தை இஸ்ரவேலர்களுக்கு தருவேன்' என்றார். மோசே 12 பேரை தேர்ந்தெடுத்து, 'அத்தேசத்தில் குடியிருக்கிற ஜனங்கள் எப்படிப்பட்டவர்கள், அத்தேசம் எப்படிப்பட்டது என்று பார்த்து வாருங்கள்' என்று யோசுவாவையும் காலேபையும் சேர்த்து 12 உளவாளிகளை அனுப்பினார். 40 நாட்களுக்குப் பிறகு அது நல்ல தேசம், அங்குள்ள மக்கள் பலசாலிகள், நகரங்களைச் சுற்றி பெரிய மதில்கள் இருக்கின்றன என்று நம்பிக்கையில்லாதவர்கள் போல் பேசினார்கள். நாம் அவர்களை ஜெயித்து விடலாம், உடனே போகலாம் என்று காலேப் சொன்னார். மற்ற 10 உளவாளிகளும் வேண்டாம், அந்த மக்கள் இராட்சதர்கள் மாதிரி இருக்கிறார்கள்! அவர்களுக்கு முன்பு நாங்கள் வெறும் வெட்டுக்கிளிகளைப் போல் இருந்தோம் என்று சொன்னார். நாம் 'வேறொரு தலைவரை தேர்ந்தெடுத்து எகிப்துக்கே திரும்பிப் போகலாம், ஏன் அங்கு போய் சாக வேண்டும்' என்று பேசினார்கள். யோசுவாவும், காலேபும் நம்பிக்கையான வார்த்தைகளை சொன்னார்கள். ஆனால் அவர்கள் கேட்காமல், யோசுவாவையும், காலேபையும் கொன்று போட தீர்மானித்தார்கள். தேவ கோபத்துக்கு ஆளானதினால் கர்த்தர் வாக்குப்பண்ணின தேசத்துக்குள் அவர்களால் பிரவேசிக்க முடியவில்லை **(வாசிக்க: எண். 13, 14 அதிகாரங்கள்).**

அன்பான வாலிபர்களே! 10 உளவாளிகளும் திடனற்றவர்களாக, நம்பிக்கை இழந்ததினால் வாக்குப்பண்ணின தேசத்தை சுதந்தரிக்க முடியவில்லை. நீங்கள் கூட இவர்களைப் போல திடனற்றவர்களாக இருக்கிறீர்களா? உங்கள் நம்பிக்கையை கர்த்தர் பக்கம் திருப்பும் போது திடமனதை பெற்றுக் கொள்வீர்கள்!

## பாராக்



பெண் தீர்க்கதரிசியான தெபொராள், பாராக்கிடம், நீ 10,000 பேரைக் கூட்டிக் கொண்டு கீசோன் நீரோடைக்கு போ, அங்கே யாபீனின் படைக்கு எதிராக நீ சண்டை போட வேண்டும், யாபீனின் படைத் தளபதியான சிசெராவை அங்கே தோற்கடிப்பாய் என்று கர்த்தர் சொல்ல சொன்னதை அவரிடம் தெரிவித்தாள். அந்த செய்தியைக் கேட்ட போது பாராக், தனியாக செல்ல பயந்து, ''நீ என்னோடு வந்தால் தான் நான் போவேன்'' என்று சொன்னார். அதற்கு தெபொராள், நான் வருகிறேன், ஆனால் நீ போகிற பிரயாணத்தில் உண்டாகிற மேன்மை உனக்கு கிடையாது. கர்த்தர் சிசெராவை ஒரு பெண் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றாள். பாராக்கும் அவருடன் இருந்த 10,000 பேரும் சிசெராவின் பெரிய படையோடு போர் செய்வதற்கு மலையிலிருந்து இறங்கிச் சென்றனர். கர்த்தர் சிசெராவையும், எல்லா ரதங்களையும், சேனைகளையும் பாராக்கிற்கு முன்பாக பட்டயக்கறுக்கினால் கலங்கடித்தார். அதனால் சிசெரா தன்னுடைய ரதத்திலிருந்து இறங்கி ஓடினான். பாராக்கும் அவருடைய வீரர்களும் சிசெராவின் படையைத் தோற்கடித்தார்கள். ஆனால் சிசெராவோ யாகேல் என்ற பெண்ணால் கொல்லப்பட்டான் **(வாசிக்க: நியா. 4ம் அதிகாரம்).**



அன்பான வாலிபர்களே! பாராக் தேவன் சொன்ன வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல், திடனற்று போய், வாக்களித்த கர்த்தரை நம்பாமல் தெபொராளின் மீது நம்பிக்கை வைத்ததால், கர்த்தர் சிசெராவை அவன் கையில் ஒப்புக் கொடுக்கவில்லை.

சரித்திரம்: ஜெயசீலன்

# தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன்

## தாவீதின் கொம்புத் தைல அபிஷேகம்!



என் அன்பு வாலிபர்களே! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் உங்களுக்கு என் வாழ்த்துக்கள். சென்ற மாதம் மன்னன் தாவீதின் ஆரம்ப கால வாழ்வைப் பற்றி தியானித்தோம். இம்மாதம் தொடர்ச்சியாக தாவீதுக்கு கர்த்தர் தந்த அபிஷேகம் பற்றி தியானிக்கலாம்.

'மாசாக்' என்ற எபிரேய வார்த்தைக்கு 'எண்ணெய் தடவுதல்' அல்லது 'எண்ணெய் பூசுதல்' என்று பொருள். பெத்லகேமிற்கு தீர்க்கன் சாமுவேல், கர்த்தரால் அனுப்பப்பட்டதின் நோக்கமே, தாவீதை மன்னனாக அபிஷேகம் செய்வதற்குத்தான். ஆனால் அப்படிப்பட்ட பலிவிருந்து பற்றி, வனாந்திரத்தில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த தாவீதுக்கு அறிவிக்கப்படவும் இல்லை. அந்த பலிவிருந்துக்கு தாவீது அழைக்கப்படவும் இல்லை. அந்த அளவுக்கு கடைசிப் பிள்ளையாகிய தாவீது, பெற்றோராலும், உடன் பிறந்தவர்களாலும் அற்பமாய் எண்ணப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட நிலையிலிருந்தார் என்று பார்த்தோம்.



பெத்லெகேம் ஆலயத்தில் பலிவிருந்து ஆயத்தமானது. ஆனால் விருந்திற்கு முன் திடீரென சாமுவேல் தீர்க்கதரிசி, தாவீதின் தகப்பனாகிய ஈசாயை அழைத்து, உன் பிள்ளைகளை வரிசையாக அனுப்பு என்றார். ஈசாய், தன் மூத்த மகன் எலியாப் தொடங்கி ஒத்சேம் வரை தன் 7 அழகான ஆண் பிள்ளைகளையும் வரிசையாக அனுப்பினார். இவனாயிருக்குமோ.... இவனாயிருக்குமோ என தீர்க்கன் சாமுவேலும், வெளித்தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து போனார். ஆனால் கர்த்தரோ, ''மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; நீ முகத்தைப் பார்க்கிறாய்; நான் இருதயத்தைப் பார்க்கிறேன். இவர்கள் ஏழு பேரையும் நான் புறக்கணித்தேன்;'' என்று சொல்லிட்டாங்க. என்னடா இது சாமுவேலுக்கு வந்த சோதனை என அவரும் குழம்பிப் போனார்.

பின் ஈசாயைப் பார்த்து, 'ஏம்பா உனக்கு பிள்ளைகள் இவ்வளவுதானா?' என்று கேட்க, அப்போது தான், தங்களால் மறக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, அற்பமாய் எண்ணப்பட்டு ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த கடைசி மகன் தாவீதின் நினைவு அப்பாவுக்கு வந்தது. இன்னும் எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான்; அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறான்; என்று கூறினார். அப்பவும் கூட, 'இதோ ஆள் அனுப்பி அவனை அழைக்கிறேன்;' என்று சொல்ல மனமில்லை. மாறாக 'அவன் ஆடு மேய்க்கிறவன், இந்த அபிஷேகம், விருந்து இதுக்கெல்லாம் அவன் சரியா வரமாட்டான்;' என்பது போல தாவீதை இழிவாய் சாமுவேலுக்கு அறிமுகம் செய்தார். நான் சிறுவனாய் இருந்த போது, எங்கள் வீட்டிற்கு அருகே குடியிருந்த குடும்பத்தில் ஆறு பிள்ளைகள். அதில் 3வது மகனைப் பார்த்து, அவர்களின் உறவுக்காரர் ஒருவர், நீ நல்லா சமைப்படா. நீ சமைக்கதான்டா லாயக்கு: என்றே சொல்லுவார். காலப்போக்கில் அவனைப் பள்ளிக்கு அனுப்பாமல் வீட்டில் சமையல் வேலைக்கே வைத்து விட்டார்கள். உங்க வீட்ல கூட, உங்கள் பெற்றோர், இந்தப்பய இதுக்கெல்லாம் சரியா வரமாட்டாங்க. இதற்கெல்லாம் இவன் லாயக்கில்லை, உதவாக்கரை, வீட்டுக்குத் தெண்டமும், பூமிக்கு பாரமுமாயிருக்கிறான் என உறவுகளுக்கு முன்

உங்களை உதாசீனப்படுத்தி, காயப் படுத்துகின்றார்களோ? கலங்காதிருங்கள்! தாவீதும் இதற்கு விதிவிலக்கல்ல.

ஆனால், சாமுவேல் தீர்க்கதரிசியோ, ஈசாயைப் பார்த்து: 'உடனே ஆள் அனுப்பி அவனை அழைத்து வா, அவன் இங்கே வருமட்டும் நான் சாப்பிடமாட்டேன்,' எனப் பிடிவாதமாய்ச் சொல்லிவிட்டார். பின் வேறு வழியில்லாமல் வனாந்திரத்திற்கு ஆள் அனுப்பி, இந்த விழாவின் கதாநாயகன் தாவீது அழைத்து வரப்பட்டார்.

'இவன்தான், நீ எழுந்து அபிஷேகம் பண்ணு என்று' கர்த்தர் சாமுவேலிடம் சொன்னாங்க. உடனே அவர் எழுந்து தைலக் கொம்பை எடுத்து, எந்த சகோதரர்கள் அற்பமாய் எண்ணி, தாவீதை அசட்டை செய்தார்களோ அவர்கள் நடுவிலே, **"என் தாசனாகிய தாவீதைக் கண்டுபிடித்தேன்; என் பரிசுத்த தைலத்தினால் அவனை அபிஷேகம் பண்ணினேன்" (சங். 89:20)** என்ற கர்த்தரின் வார்த்தையின்படியே தாவீதை அபிஷேகம் செய்தார். ஆகவே தான், ''என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்;'' எனப்பாடி, தாவீது கர்த்தரை மகிமைப்படுத்தினார். எண்ணெயால் அபிஷேகம் பெற்ற அதே வேளையில், கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்து இறங்கினார் (சாமு.16:13).

ஆடு மேய்க்கிறவன் என குடும்பத்தாரால் அற்பமாய் எண்ணப்பட்டு, தீர்க்கன் சாமுவேலுக்கு முன் அறிமுகப்படுத்தப்பட்ட தாவீது, இந்த அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டதிற்குப் பின், சுரமண்டலம் வாசிப்பதில் தேறினவனாக, பராக் கிரமசாலியாக, யுத்த வீரனாக, காரிய சமர்த்தனாக, கர்த்தர் அவனோடு கூட இருப்பவனாக (சாமு. 16:18) அறியப்பட்டு, மன்னன் சவுலுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். ஆட்டு மந்தையிலிருந்த தாவீது, மன்னன் சவுலின் அரண்மனைக்கு அழைத்துவரப்பட்டார். தாவீது தன் சுரமண்டலத்தை எடுத்து வாசித்த போது, மன்னன் சவுலுக்குள் இருந்த பொல்லாத ஆவி அவரை விட்டு நீங்கியது (1சாமு. 16:23).

இந்த அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டதிற்குப் பின், இஸ்ர வேலருக்கு சிம்மசொப்பன மாயிருந்து, அச்சுறுத்திக் கொண்டிருந்த, சுமார் 10 அடி உயரமுள்ள கோலியாத் என்னும் அரக்கனை வெறும் சாதரணக்



கவண் கல்லால் அடித்துக் கொன்று, இஸ்ரவேலருக்கு ஒரு மாபெரும் வெற்றியைத் தேடித் தந்தார், 20 வயதே நிறைந்த தாவீது. எல்லாவற்றிற்கும் மேலாக தனது 30ம் வயதில் இஸ்ரவேலின் ராஜாவாய் உயர்த்தப்பட்டார்.

காரணம் அவருக்குள் இருந்த அபிஷேகம், அவரில் தங்கியிருந்த கர்த்தருடைய ஆவியானவர். **"...ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று..." (சங். 118:22,23)** எனத் தன் அனுபவத்தை தாவீது பாடுகிறார்.

அன்பு தம்பி, தங்கையரே! இந்த உலகத்தாலும் உறவுகளாலும் தள்ளப்பட்ட நிலையில் இருக்கின்றீர்களா? இந்த அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள இன்றே உங்களை அர்ப்பணியுங்கள். கர்த்தருடைய ஆவியானவர் உங்களில் தங்கி, உங்களை வழி நடத்த ஆயத்தமாயிருக்கிறார்.

ஆவியானவரின் இந்த அபிஷேக தைலம் உங்களில் ஊற்றப்படும் போது, பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் கண்டித்து உணர்த்துகிற பரிசுத்த ஆவியானவர் உங்களோடிருப்பதால், பாவத்தை மேற்கொள்வீர்கள். எந்த ஒரு பாவமும் உங்களை அணுகுவ தில்லை. சத்திய ஆவியானவர் உங்களில் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவதை உணருவீர்கள்.

இந்த ஆவியானவர் போதிக்கிறவராய், எல்லாவற்றையும் நினைப் பூட்டுகிறவராய் உங்களோடிருப்பார்.

இந்தப் பரிசுத்த ஆவியானவர் உங்களில் வரும்போது, நீங்கள் புது பெலனடைவீர்கள். பெலவீனங்கள் மாறும்.

இந்த ஆவியானவரின் நிறைவு உலகெங்கும் உங்களை சாட்சியாய் நிறுத்தும். எந்த ஒரு மனிதனும் உங்களை எதிர்த்து நிற்க முடியாது. (No man can stand against you).

உங்கள் வாழ்வில் இதுவரை இல்லாத ஆசீர்வாதத்தைப் பெறுவீர்கள்.

இன்றே இந்த ஆவியானவர் என்னும் துணையாளரை பெற்றுக் கொள்ள அர்ப்பணியுங்கள்.



# யோசனையில் பெரியவர்

# அசீரிய இராஜ்யத்தின் வீழ்ச்சி

நிகழ்வு: கெத்சி கிளாரின்

**வேதாகமத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எதிராக யுத்தங்களும் போராட்டங்களும் வந்த போது, அவர்களுக்காக கர்த்தர் கையாண்ட யுக்திகளைப் பற்றி இந்த "யோசனையில் பெரியவர்" என்னும் தொடரில் நாம் வாசித்து வருகிறோம். அந்த வரிசையில் இம்மாதம், 'உலகத்தின் பலமிக்க சேனைகளையுடைய அசீரிய இராஜ்ஜியத்தை, ஒரே ஒரு தூதனைக் கொண்டு கலங்கப்பண்ணி, யுத்தம் செய்து, வீழ்த்திய சம்பவத்தை பற்றி தான் பார்க்கப் போகிறோம்'.**

ஆம்! ஜீவனுள்ள தேவனையும் அவரது ஜனங்களையும் தூஷிப்பதும் நிந்திப்பதுமான காரியங்களை செய்தவர்களுக்கு, கர்த்தர் தன்னுடைய வல்லமையை விளங்கச் செய்த சம்பவமே இதுவாகும். (2 இராஜாக்கள் 18,19)

- உங்களது பள்ளி கல்லூரியில் இயேசுவுக்கு சாட்சியாய் வாழ்வதினால் நிந்தனைகளையும் தூஷணங்களையும் சந்தித்து வருகிறீர்களா?
- இரட்சிக்கப்படாத குடும்ப உறவுகளின் மத்தியில் கிறிஸ்துவுக்காய் வைராக்கியமாய் நிற்பதினால் நிந்தனைகளையும் தூஷண வார்த்தைகளையும் சந்தித்து வருகிறீர்களா?
- கடன் பிரச்சனை, வியாதி, வறுமை போன்றவற்றினால் நிந்தனைகளை சந்தித்து வருகிறீர்களா?

யுத்தம் போன்ற இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், திடன்கொள்ளுங்கள்..! ஏனென்றால், இந்த யுத்தங்களை நடத்துகிறவர் யோசனையில் பெரியவரான சர்வ வல்லமையுள்ள கர்த்தர் என்பதை மறவாதீர்கள்!

இச்சம்பவத்தில், கர்த்தரை சார்ந்துக் கொண்டு, அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு வாழ்ந்து வந்த எசேக்கியா ராஜாவின் காலத்தில், அசீரியர்கள் யூத தேசத்திற்கு விரோதமாய் யுத்தத்திற்கு வந்த வேளையில், முன்பு கண்ட வெற்றியின் நிமித்தம் பெருமை கொண்டவர்களாய் யூத மக்களை வார்த்தையினால் காயப்படுத்தினர்.

இப்படி காயப்பட்ட அனுபவங்கள் உங்களுக்கும் உண்டா? திடன்கொள்ளுங்கள்! சர்வ வல்லவர் உங்கள் பக்கம் இருக்கிறார். இப்படிப்பட்ட நிந்தைக்கு மத்தியில் யூத மக்கள் என்ன செய்தார்கள் என்று உங்களுக்கு தெரியுமா?

**"...ஜனங்கள் அவனுக்கு ஒரு வார்த்தையும் பிரதியுத்தரமாகச் சொல்லாமல் மவுனமாயிருந்தார்கள்..." (2 இராஜாக்கள் 18:36)**

ஆம்! உங்களை ஏளனமாய் பேசுபவர் எவராயினும் யூத மக்களைப் போல் எந்தவொரு மறு உத்தரவும் கொடுக்காமல் மவுனமாயிருங்கள். அப்பொழுதுதான் இது கர்த்தரின் யுத்தமாய் மாறும்.

அதுமட்டுமல்ல, ''ஜாதிகளுடைய தேவர்களில் யாராவது தங்கள் தேசத்தை அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்ததுண்டோ?'' என்ற அசீரியர்களின் பெருமைக்கு கர்த்தர் கொடுத்த விடை என்னவென்று உங்களுக்கு தெரியுமா?

**"...கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான்; அதிகாலமே எழுந்திருக்கும்போது, இதோ, அவர்கள் எல்லாரும் செத்த பிரேதங்களாய்க் கிடந்தார்கள்" (2 இராஜா. 19:35)** என்று வேதப்புத்தகத்தில் பார்க்கிறோம்.

ஆம்! ஒரே ஒரு தூதனைக் கொண்டு கர்த்தர் அசீரியர்களின் மொத்த பெருமைகளையும் தகர்த்துப்போட்டார். அதிலும் குறிப்பாக, இப்படிப்பட்ட சூழ்நிலையில் பொறுமையாயும் மவுனமாயும் இருந்த தன் ஜனமாகிய யூதர்களுக்கோ அவர் ஆதரவாயிருந்தார்.

**"பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (1 பேதுரு 5:5).**

# ஆசிரியர் தினம்!



ஆசிரியர் பணி என்பது சாதாரண பணி அல்ல, அது ஒரு மாபெரும் தொண்டு. மாணவர்களின் அறியாமை என்னும் இருளை நீக்கி, அவர்களது வாழ்வில் ஒளி ஏற்றுபவர்கள் ஆசிரியர்கள். அத்தகைய ஆசிரியர்களின் சேவைகளை நினைவு கூர்ந்து செப்டம்பர் 5ஆம் தேதி ஆசிரியர் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

HAPPY Teacher's Day



## ஆசிரியர்களின் சிறப்புகள்!

- மாணவர்களின் மனதில் எப்போதும் நேர்மறை எண்ணங்களை ஏற்படுத்தி உற்சாகப்படுத்துபவராகவும், மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்த ஊக்கப்படுத்துபவராகவும் இருப்பவரே ஆசிரியர்.
- ஆசிரியர் பணி என்பது வேலைக்கு செல்வதற்கு மாணவர்களை தயார்படுத்தும் பணி அல்ல. ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக இருந்து ஒழுக்கம், திறமை மற்றும் சமூக அக்கறை உடைய நல்ல குடிமக்களை உருவாக்குபவர்கள்.
- மாணவர்களாகப் பள்ளிக்கு வரும் சிறுவர்களுக்கு ஒழுக்கம், நல்ல பழக்க வழக்கம், படிப்பு என அறிவுக் கண்ணை திறந்து வைத்து அவர்களை சாதனையாளர்களாக்குபவரே ஆசிரியர்.
- மாணவர்களின் சமூக பங்களிப்பு எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு தெளிவை ஆசிரியர்கள் தான் கற்றுக் கொடுக்கின்றனர். மாணவர்களுக்காகத் தம்மையே அர்ப்பணித்தவர்கள் ஆசிரியர்கள்.



## நல்ல ஆசிரியரின் பண்புகள்!

- மாணவர்கள் தொடர்ந்து தங்கள் கவனத்தைத் தக்க வைத்துக் கொள்ள கூடியவாறு கற்பித்தலை மேற்கொள்ள கூடியவராக இருப்பார்.
- மாணவர்கள் மீது மிகுந்த அக்கறை கொண்டு, அவர்களின் முன்னேற்றம் மற்றும் வெற்றிக்கு வழிவகுப்பர்.
- ஆசிரியர் பணி என்பதனை வேலையாக அல்ல; அதை ஒரு சேவையாக செய்வர்!



# ஜெபக்

## செப்டம்பர் 2023

1 இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் 4 இலட்சம் பெண் சிசுக்கள், பிரசவத்துக்கு முந்தைய பாலின சோதனை மூலமாக கண்டறியப்பட்டு கலைக்கப்படுவது தடுத்து நிறுத்தப்பட ஜெபியுங்கள்.

2 வரதட்சணை கொடுக்க வேண்டுமென்ற பயத்தில் பெண் சிசுக்கள் அழிக்கப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. இந்த நிலை முற்றிலும் மாற ஜெபியுங்கள்.

3 2017ம் ஆண்டிலிருந்து 2022ம் ஆண்டு வரை சுமார் 35,493 பெண்கள் வரதட்சணைக்காக கொல்லப்பட்டிருக்கிறார்கள். வரதட்சணை என்கிற பொல்லாத ஆவி நம் தேசத்திலிருந்து ஒழிக்கப்பட ஜெபியுங்கள்.

4 ஒரு மணி நேரத்திற்கு ஒரு பெண் வரதட்சணை கொடுமையால் பலியாவது தடுக்கப்பட ஜெபியுங்கள்.

5 ஒவ்வொரு 4 நொடிக்கும் ஒரு பெண் வரதட்சணை கொடுமைக்கு ஆளாவது தடுக்கப்பட்டு, பெண்கள் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.

6 வரதட்சணை வாங்குவது பாவம் என்ற விழிப்புணர்வு மணமகன் குடும்பத்தாருக்கு உண்டாக ஜெபியுங்கள்.

7 வரதட்சணையை காரணமாக கொண்டு திருமணம் நடைபெறாததால் அநேகர் விரக்தியில் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இந்நிலை மாற ஜெபியுங்கள்.

8 உலகளவில் கடந்த 2022ம் ஆண்டு, 250 கோடி மக்கள் தங்களுக்கு தேவையான உணவு பொருட்கள் கிடைக்காமல் மரித்துள்ளனர். பசியோடு இருக்கும் மக்களுக்கு உணவு பொருட்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

9 ஊட்டச்சத்து நிறைந்த உணவு பொருட்கள் கிடைக்கப் பெறாமல் 14.8 கோடி குழந்தைகளின் வளர்ச்சியில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. குழந்தைகளுக்கு நல்ல சத்துணவு கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

10 உலகம் முழுவதும் ஒருவேளை உணவில்லாமல் தவிக்கும் மக்களுக்கு, தேவையான ஊட்டச்சத்து நிறைந்த உணவு கிடைத்து பசியாற ஜெபியுங்கள்.

11 ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தி செய்யப்படும் உணவில் மூன்றில் ஒரு பங்கு (130 கோடி டன்) உணவு வீணடிக்கப்படுவது தடுக்கப்பட ஜெபியுங்கள்.

12 ஒன்பது பேரில் ஒருவர் பசி, பட்டினியால் வாடுவதோடு, மரணங்களை சந்திக்கும் நிலை மாற ஜெபியுங்கள்.

13 இந்தியாவில் இணையதளம் உபயோகிக்கும் 67 கோடி பேர் மீது தேவ ஆளுகை உண்டாக ஜெபியுங்கள்.

14 இதில் 60% மாணவர்கள் இணையதளம் உபயோகிக்கிறார்கள். மாணவர்களின் படிப்பு மற்றும் எதிர்காலம் பாதிக்கப்படாமல் தேவன் அவர்களை பாதுகாக்க செய்ய ஜெபியுங்கள்.

15 ஐந்து வயது முதல் 18 வயது வரை உள்ள சிறுவர்கள், சிறுமிகள் பலமணி நேரத்தை செல்போனில் செலவழிக்கிறார்கள். செல்போனுக்கு அடிமைப்பட்டிருக்கும் சிறுவர்கள் மீட்கப்பட ஜெபியுங்கள்.

16 செல்போன் அடிமைத்தனத்தால் மனநலம் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர் சிறுமியர் இதிலிருந்து விடுவிக்கப்படவும், இதற்கென்று ஆலோசனை மையங்கள் அமைக்கப்படவும் ஜெபியுங்கள்.



ஜெபம்: பெனிட்டா

# கையேடு

**17** தேசமெங்குமுள்ள அரசு மருத்துவமனைகளில் நல்ல சுகாதாரமான சூழ்நிலை உருவாக ஜெபியுங்கள்.

**18** அரசு மருத்துவமனைகளில் நவீன கருவிகளை அரசு வழங்க, திட்டங்கள் வகுக்கப்பட ஜெபியுங்கள்.

**19** மருத்துவமனைகளில் பணிபுரிபவர்கள் சேவை மனப்பான்மையுடன் செயல்படவும், அஜாக்கிரதைகள் மாறி உண்மையோடு செயல்படவும் ஜெபியுங்கள்.

**20** அரசு மருத்துவமனைகளில் பணத்திற்காக செய்யப்படுகின்ற குழந்தை கடத்தல், திருட்டு, வன்முறை போன்ற அநீதியான செயல்கள் முற்றிலும் மாறும்படி ஜெபியுங்கள்.

**21** மருத்துவத்தில் நல்ல தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள், அரசு மருத்துவமனைகளில் சேவை மனப்பான்மையுடன் பணி செய்ய முன்வர ஜெபியுங்கள்.

**22** தொடர் மழை காரணமாக வட இந்திய மாநிலங்களில் அநேகர் உயிரிழந்துள்ளனர். இயற்கையினால் இனி எந்த மரணங்களும் ஏற்படாதவாறு தேவ பாதுகாப்பு உண்டாக ஜெபியுங்கள்.

**23** நம் தேசம் முழுவதும் சரியான கால சூழ்நிலைகளை கர்த்தர் உருவாக்கி, ஆசீர்வாதமான மழையை கட்டளையிட ஜெபியுங்கள்.

**24** இந்தியாவில் அதிகரித்து வரும் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு கட்டுப்படுத்தப்பட ஜெபியுங்கள்.

**25** விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்டிருக்கும் ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரங்களுக்காக ஜெபியுங்கள்.

**26** மணிப்பூர் மாநிலத்தின் சமாதானத்திற்காகவும், அங்கு நடைபெறும் கலவரம் நிறுத்தப்படவும் ஜெபியுங்கள்.

**27** கலவரத்தினால் அண்டை மாநிலங்களுக்கு குடிபெயர்ந்திருக்கும், 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.

**28** வீடுகளை, சொந்தங்களை இழந்து தவிக்கும் மக்களின் ஆறுதலுக்காக ஜெபியுங்கள்.

**29** 2024ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் தேவ ஆளுகை உண்டாகவும், கர்த்தருக்கு சித்தமானவர்கள் தேர்ந்தெடுக்கப்படவும் ஜெபியுங்கள்.

**30** தேர்தலுக்கு ஆயத்தப்படும் கட்சிகள் எந்த விதமான சட்ட விரோதமான செயல்களில் ஈடுபடாதபடிக்கு ஜெபியுங்கள்.

*தினமும் ஒரு நிமிடம் எடுத்து அன்றைய தேதியில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபக்குறிப்புக்காக முழுமனதோடு கருத்தாய் ஜெபியுங்கள்!*



Revival IGNITERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

# Igniters Monthly Fellowship

## EVERY 1ST SUNDAY (3RD SEP.)

### MUMBAI - DHARAVI (5PM - 8PM)
World Revival Prayer Centre
2nd Floor, Above Balakrishna
Farsan Mart,
Opp. Apna Restaurant,
Near Kamarajar School,
90 Feet Road,
9004882470

### VELLORE (3PM)
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9786379556

### TIRUPUR (4PM - 6:30PM)
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442082200

### TUTICORIN (3PM - 5:30PM)
World Revival Prayer Centre,
Jehovah Jireh
Towers, 51/8D/3, 1st Floor
Tiruchendur Road,
Muniasamypuram Land mark :
South Police Station to Kamaraj
College Rd. 9442885315

### TIRUPATI (3PM)
Old Community Hall,
West Church
9985033401 | 9442885315

## EVERY 2ND SATURDAY (9TH SEP.)

### BANGALORE (3PM-5PM)
Telugu Church, #21,
Nethaji Road, Railway Line
Pulikeshi Nagar, Frazer Town.
Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

### MADURAI (3PM -5:30PM)
American College Higher
Secondary School,
AC School
Backside to Arumugam Hotel,
Tallakulam Bus Stop.
9750955548 | 9344759316

## EVERY 2ND SUNDAY (10TH SEP.)

### SANKARANKOIL (2:30PM - 5PM)
World Revival Prayer Centre,
Sekihnah Mahal,
Mullai Nagar.
9750955548 | 8344949555

### MUMBAI-MALAD (2:30PM - 5PM)
Bethel 1st Floor
305/E, Mith Chauky, Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976

### AMBUR (3PM-6PM)
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

### MUMBAI - THANE (4PM - 6:30PM)
9004882470

### POLLACHI (3PM TO 6PM)
World Revival Prayer Centre,
Grace Auto 1st floor,
163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

### THANJAVUR (3PM)
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

### KOVILPATTI (3PM -5:30PM)
St. Paul's Matriculation School
9677858766 | 9787322334

### ALANGULAM (2:30PM)
P.M.V. Packiyavathy Building,
R.A. Nursing Institute,
SCV Computers (top Floor)
Main Road,
Near Union Office Opposite
9965377427 | 9750955548

### THENI (2:30PM - 5PM)
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital,
1st Floor
9750955548 | 9976766422

### SURANDAI (2:30PM)
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

### SIVAKASI (3PM -5PM)
World Revival Prayer Centre,
HOREB Complex, 1st Floor,
P K N Road, (Rathna vilas Stop)
9677858766 | 9442906567

### SATHANKULAM (3PM -5:30PM)
Hendry Matric Higher Secondary School Mela Sathankulam.
9442885315

### CHENGALPET (3PM – 5:30PM)
Blessing School,
Tirukazhukundram Road
9488475315

### VILLUPURAM (3PM – 5:30PM)
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## EVERY 3RD SUNDAY (17TH SEP.)

### TIRUNELVELI (2:30 PM)
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

### COIMBATORE (4 PM)
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

### TRICHY (3 PM)
World Revival Prayer Centre,
22A, 1st Floor Thennur High Road, Near KMC Bus Stop,
Thennur.
9488475315

### JEBAMALAI (2 PM)
Keelamathapuram,
Kadaiyam (via)
Tenkasi Dist.
8300131000 | 9750955548

### CHENNAI (3 PM)
VGP Victory House, Mount Road
9488475315

### NALUMAVADI (3PM -5:30PM)
Tabernacle of God,
Nalumavadi
9442885315

### TIRUVARUR (3:30PM)
World Revival Prayer Centre,
1A/25B, Bypass Road
(opp Arasu Autos)
9976766322 | 7373374733

### RANIPET (3PM-6PM)
World Revival Prayer Centre,
Railway Station RoadZion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

### ERODE (4PM – 6:30PM)
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

### NAGERCOIL (3PM TO 6PM)
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

### PONDICHERRY (3PM TO 6PM)
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

### PERNAMPET (3PM TO 6PM)
Revival Prayer centre,VK Road.
9442885315

### CHITTOOR (3PM TO 6PM)
Kamlambal Street,Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4TH SATURDAY (23RD SEP.)

### PERAMBALUR (5PM -8PM)
World Revival Prayer Centre,
M K Complex, 71,Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY (24TH SEP.)

### THIRUVALLUR (3PM -5:30PM)
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

### KRISHNAGIRI (3 PM – 5PM)
World Revival Prayer Centre,
Near Arun Hospital
Royakottai Road.
9962085523 | 9524999711

### KARUR (3PM-5:30PM)
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி
சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி
காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.
வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547




ON SUNDAY 24th SEPTEMBER
TIME: 3:00 PM - 5:00 PM
IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH

பேசலாம் வாங்க: வயலா



# Coffee with பத்திரிக்கையாளர்

## நூற்றுக்கு அதிபதி

பரிசுத்த வேதாகமத்தில் பெயர் குறிப்பிடப்படாமல் தங்கள் செய்கையினால் அறியப்பட்டவர்கள், குணத்தினால் அறியப்பட்டவர்கள், கணவர் பெயரால் அறியப்பட்டவர்கள், பிறந்த / வளர்ந்த / ஆளுகை செய்த இடத்தின் பெயரால் அறியப்பட்டவர்கள், இவ்வாறு பல நபர்களுடனான உரையாடல்களின் கற்பனைத் தொகுப்பை கடந்த மாதங்களில் கண்டோம். இந்த இதழிலும் தன்னுடைய பதவியின் பெயரால் அறியப்பட்ட 'நூற்றுக்கு அதிபதி', அதாவது பண்டைய ரோம் நகரத்தில் நூறு போர் வீரர்களின் தலைவனாக பணியாற்றியவரைக் குறித்து காணலாம். பல நூற்றுக்கு அதிபதிகளைக் குறித்து வேதாகமத்தில் கூறப்பட்டிருந்தாலும் மத்தேயு 8:5-13 மற்றும் லூக்கா 7:1-10 ஆகிய பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நூற்றுக்கு அதிபதியுடனான உரையாடலின் கற்பனைத் தொகுப்பை கீழ்க் காண்போம்.

**பத்திரிக்கையாளர்:** அதிபதி அவர்களே, வணக்கம்!

**நூற்றுக்கு அதிபதி:** வணக்கம்!

**பத்தி:** எங்கள் வாலிபர்கள், உங்களைப் பற்றி அறிந்து கொள்ளும்படியான சில வார்த்தைகள் கூறுங்களேன்.

**நூ.அ:** நான் நூறு போர் சேவகர்களுக்கு அதிகாரியாக, சட்ட ஒழுங்குகளை நிறைவேற்றுகிறவனாக, ரோம அரசாங்கத்துக்கு உத்தரவாதம் உள்ள ரோம அதிகாரியாக பணியாற்றினேன். ரோமர்களின் துறைமுகப் பட்டணமான கப்பர்நகூமில் வசித்தேன். இங்கு ரோமர்கள், கிரேக்கர்கள், யூதர்கள் போன்ற பல மக்கள் வசித்து வந்தனர். நான் யூத ஜனங்களை நேசித்து அவர்களுக்கென ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டி, என் ஜனங்களின் மத்தியில் பேரோடும், புகழோடும் வாழ்ந்து வந்தேன்.

**பத்தி:** இயேசு, உங்கள் வீட்டிற்கு சமீபமான போது, ''ஆண்டவரே நீர் வருத்தப்பட வேண்டாம், நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல'' என்று ஏன் கூறினீர்கள்? சர்வ லோகத்தின் அதிபதியாகிய தேவகுமாரன் உங்கள் வீட்டிற்கு வந்தால் உங்களுக்குத் தானே பெருமை?

**நூ.அ:** இல்லை... இல்லை. இயேசு மகா பரிசுத்தர்! மகா உன்னதமானவர்! அவர் சாதாரண மனிதன் அல்ல, தேவ குமாரன், ராஜாதி ராஜா! அவரை என் வீட்டிற்கு அழைக்க எனக்குத் தகுதியில்லை. மட்டுமல்ல திரளான ஜனங்கள் இயேசுவை எப்பொழுதும் சூழ்ந்து கொண்டு



அற்புதத்திற்காக ஏங்கி நிற்கும் போது நான் அவரை மேற்கொண்டு அலட்ட வேண்டாம் என்று எண்ணி அப்படி கூறினேன்.

**பத்தி:** அதிபதியே, ''நான் ஒருவனை போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான், என் வேலைக்காரனை இதைச் செய்யென்றால் செய்கிறான்'' என்று உங்கள் அதிகாரத்தைப் பற்றி நீங்கள் கூறியது ஏன்?

**நூ.அ:** வெறும் நூறு பேருக்கு அதிபதியாகிய என் வார்த்தைக்கே இவ்வளவு மதிப்பு என்றால் அண்டசராசரங்களையும் தன் வார்த்தையினால் சிருஷ்டித்து, சகலத்தையும் ஆளுகின்ற ராஜாவாகிய அவருடைய வார்த்தைக்கு எத்தனை வல்லமை இருக்கும் என்று நினைத்து நீர் ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்று கூறினேன்.

**பத்தி:** இப்படிப்பட்ட விசுவாசம் உங்களுக்குள் எப்படி வந்தது?

**நூ.அ:** விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதி. ஆகையால் இயேசுவிடம் நான் மன்றாடினதால், தூரத்திற்கும் சமீபத்திற்குமான தேவன், என் விண்ணப்பத்தைக் கேட்டார். மனுஷன் முகத்தை பார்க்கிறான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் அல்லவா? எனக்கு இயேசுவின் மேல் உள்ள விசுவாசத்தின் ஆழம், அசையாத நம்பிக்கையைக் கண்டு மரண அவஸ்தையாயிருந்த என் வேலைக்காரனை சுகப்படுத்தினார். மட்டுமல்ல 'இஸ்ரவேலருக்குள் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை' என்று அவருக்கு பின் செல்லுகிற திரளான ஜனங்களிடம் அவர் என்னைப் பற்றி கூறக்கேட்ட போது என் உள்ளம் மகிழ்ச்சி அடைந்தது.

**பத்தி:** அதிபதியே, நீங்கள் எங்கள் வாலிபச் செல்லங்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

**நூ.அ:** முதலாவதாக, 'இயேசுவை விசுவாசியுங்கள்' ஏனென்றால் அவரை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். இரண்டாவதாக, 'இயேசுவின் வார்த்தைக்கு' முக்கியத்துவம் கொடுங்கள். ஏனென்றால் மனுஷன் தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறது. எனவே வேதத்தை வாசிப்பதற்கும், 



தியானிப்பதற்கும் அதிக நேரம் செலவிடுங்கள். மூன்றாவதாக, 'நீங்கள் ஒவ்வொருவரும் ஆலயம் கட்டுங்கள்' என்று கூறுவது இயலாத காரியம். ஆனால் ஒவ்வொரு தனி மனிதனின் உள்ளமும் தேவன் தங்கும் ஆலயமே. எனவே உங்களைச் சுற்றியுள்ள நண்பர்கள், அயல் வீட்டுக்காரர், உறவுகள் போன்ற யாவரும் இயேசுவை அறிந்துக் கொள்ளவும், இயேசு தங்கும் ஆலயமாக அவரவர் உள்ளத்தை பரிசுத்தமாக காத்துக் கொள்ளவும் சுவிசேஷத்தை அறிவியுங்கள். கர்த்தர் உங்கள் வாழ்வில் செய்த அற்புதங்களை கூறி அவர்களுக்காக ஜெபியுங்கள். ஒவ்வொரு தனி மனிதனும் தன் உள்ளமாகிய ஆலயத்தைக் கட்டவும், பரிசுத்தமாய்க் காத்துக் கொள்ளவும் உங்களால் இயன்றதை செய்யும் போது இயேசு மகிழ்வார், உங்கள் நிமித்தம் மகிமைப்படுவார். இறுதியாக அதிகாரத்தில் உங்களுக்கு கீழ்ப்பட்டவர்களையும், உங்கள் வீட்டில் பணிபுரியும் வேலைக்காரர்களையும் நேசித்து, அவர்களும் இயேசு என்னும் அற்புத தேவனின் மகத்துவங்களை அறிந்து கொள்ளச் செய்து அவர்களின் நன்மைக்காகவும், சுக வாழ்வுக்காகவும் இயேசுவிடம் மன்றாட மறவாதேயுங்கள். நன்றி.

**பத்தி:** நன்றி அதிபதி அவர்களே!

**அன்பான வாலிபர்களே, இந்த நூற்றுக்கு அதிபதியினிடத்தில் காணப்பட்ட மலை போன்ற விசுவாசம் உங்களிலும் இருந்தால் நீங்களும் உங்கள் வாழ்வில் அற்புதங்களை காண முடியும். மீண்டும் அடுத்த மாதம் மற்றொருவருடனான உரையாடலை உங்களுக்கு படைக்கிறோம். அதுவரை தேவ கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக!**

நிகழ்வு: காலேப்





# ஓடுகளம்!

'ஓடுகளம்' என்கிற தொடரின் மூலம் கடந்த சில மாதங்களாக மாரத்தான் ஓட்ட பந்தய வீரர்களின் சாதனையைக் குறித்தும், அவர்களின் கடின உழைப்பு, விடாமுயற்சி ஆகியவற்றையும், வேதாகமத்தில் தேவனுக்காக தீவிரமாக ஓடினவர்களைக் குறித்தும் தியானித்து, அநேக காரியங்களை கற்றுக் கொண்டு வருகிறோம். இந்த மாதமும் வரப்போகிற எழுப்புதலில் எப்படி தேவனுக்காக தீவிரமாக ஓடுவது என்பதைக் குறித்து கர்த்தர் உங்களோடு பேச விரும்புகிறார்.

இதுவரை வயதான, அனுபவமிக்க அநேக மாரத்தான் வீரர்களைக் குறித்தும், அவர்கள் செய்த சாதனைகளைக் குறித்தும் பார்த்தோம். ஆனால் இந்த முறை 23 வயதே ஆன எத்தியோப்பிய நாட்டைச் சேர்ந்த **Letesenbet Gidey** என்கிற மாரத்தான் ஓட்டப்பந்தய வீராங்கனையைப் பற்றி பார்க்கலாம். பெண்களுக்கான 5000 மீட்டர் மற்றும் 10,000 மீட்டர் ஓட்டப்பந்தயங்களில் முந்தய உலக சாதனையை முறியடித்து தற்போது சாதனை படைத்திருக்கிறார். இந்த வெற்றியை அடைந்தாலும் கிடே-வின் (Gidey) ஆசை அரை மாரத்தான் (20 கி.மீட்டர்) போட்டியில் சாதிக்க வேண்டும் என்பதே. இதற்காக கடினமாக பயிற்சி எடுத்து, 2021ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஸ்பெயின் நாட்டில், வெலன்சியா பட்டணத்தில் நடைபெற்ற மாரத்தானில் 20 கி.மீட்டர் தூரத்தை 62 நிமிடங்களில் ஓடி முடித்து உலக சாதனை படைத்திருக்கிறார் (இதற்கு முன்பு 63 நிமிடங்களில் முடித்ததே சாதனையாக இருந்தது). தற்போது பெண்களுக்கான தொலைதூர ஓட்டப்பந்தய போட்டிகள் அனைத்திலும் கிடே (Gidey) முன்னணியில் இருக்கிறார். 23 வயதே ஆன இவர் இன்னும் அநேக வெற்றிகளையும், உலக சாதனைகளையும் முறிய அடிப்பார் என்று விளையாட்டு ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர். லெடெஸன்பெட் கிடேவை குறித்து வாசிக்கும் போது, வேதத்தில் இளம் வாலிபனாக அறிமுகமான தாவீது நினைவிற்கு





வருகிறார். 40 நாள் கோலியாத்தின் கோஷத்தை கேட்டு நடுநடுங்கி முதுகை காண்பித்து ஓட நின்ற இஸ்ரவேல் இராணுவத்தினர் (சவுல் ராஜா உட்பட) நடுவில், தாவீது என்கிற இளம் வாலிபன் மட்டும் கோலியாத்தை எதிர்த்து நின்றான். **"அப்பொழுது அந்தப் பெலிஸ்தன் எழும்பி, தாவீதுக்கு எதிராகக் கிட்டிவருகையில், தாவீது தீவிரமாய் அந்தச் சேனைக்கும் அந்தப் பெலிஸ்தனுக்கும் எதிராக ஓடி..." (1 சாமு 17:48) என்று எழுதியிருக்கிறது.** எல்லாரும் பின்னிட்டு ஓட ஆயத்தமாக இருக்க, தாவீது மாத்திரம் பெலிஸ்தனுக்கு எதிராக ஓடியதற்கு காரணம் என்ன?

## தாவீதின் பார்வை

தாவீது ஒரு இளம் வாலிபனாக இருந்தாலும், யுத்த களத்தில் இதுவரை சண்டையிடாதிருந்தும் அவன் கோலியாத்தை எதிர்க்க பயப்படவில்லை. அதற்கு காரணம், தாவீது கோலியாத்தை பார்த்த விதம். இஸ்ரவேல் இராணுவத்தினர் அவனை இராட்சதனாக பார்த்தார்கள். ஆனால் தாவீது, கோலியாத்தை அவன் இதற்கு முன் கொன்ற மிருகத்தைப் போலவே பார்த்தான்.

இஸ்ரவேலர்கள் பிரச்சனைகளையும், சூழ்நிலைகளையும் பார்த்து சோர்ந்து போனார்கள். ஆனால் தாவீது பிரச்சனைகளின் நடுவிலும் கர்த்தரை மட்டுமே பார்த்தான். அதினால் தான் **"நீ நிந்திக்கிற சேனைகளின் கர்த்தரின் நாமத்தில் உனக்கு எதிராக வருகிறேன்"** என்று சொல்ல முடிந்தது. நம்முடைய ஆவிக்குரிய வாழ்கையில் அல்லது ஊழியத்தில் நாம் முன்னேற முடியாதபடி இருக்க காரணம், நம் பார்வை; பின்னானவைகளையும், உலகத்தையும், சூழ்நிலைகளையும் சார்ந்திருப்பதே ஆகும். நம் பார்வை தேவன் மேலும், அவருக்கு பிரியமானவைகளின் மேலும் திரும்பும்போது நம் ஓட்டத்தின் வேகம் தீவிரப்படும், ஜெயமாகவும் முடியும். **"எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன்" (சங்கீதம் 121:1).**



## தேவன் மேல் விசுவாசம்

1 சாமு. 17:48ல் **'...தாவீது கோலியாத்தை எதிர்த்தது மட்டுமல்ல மொத்த பெலிஸ்த சேனைக்கு எதிராக ஓடினான்'** என்று எழுதியிருக்கிறது. ஒரு இளம் வாலிபன், யுத்தத்தில் முன் அனுபவம் இல்லாதவன், ஒரு தேசத்தின் இராணுவத்தை எதிர்த்து போகிறான் என்றால் அவன் தேவன் மேல் எப்படிப்பட்ட விசுவாசத்தை கொண்டிருக்க வேண்டும் என்று யோசித்து பாருங்கள். இந்த விசுவாசம் எப்படி வந்திருக்கும்? கர்த்தரோடு அவன் கொண்டிருந்த ஐக்கியமும், ஜெபமும் தான் இதற்கு காரணம். கர்த்தர் மேல் நம் விசுவாசமும், நம்பிக்கையும் இருக்கும் போது நம் வாழ்கையில் கோலியாத் போல எழும்பும் சவால்களை நம்மால் மேற்கொள்ள முடியும். **"உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்" (சங்கீதம் 18:29).**

## தேவனுக்காக வைராக்கியம்

தாவீது கோலியாத்தை வீழ்த்தியதற்கு இன்னும் ஒரு காரணம், அவன் தேவனுக்காக காண்பித்த வைராக்கியம். கோலியாத் இஸ்ரவேலர்களை மாத்திரம் அல்ல இஸ்ரவேலின் தேவனையும் நிந்தித்தான். அதை கேட்ட தாவீதால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இந்த விருத்தசேதனமில்லாதவன் எப்படி என் தேவனை தூஷிக்கலாம் என்று அவனுக்கு விரோதமாக யுத்தம் பண்ணினான். இன்றும் நம் தேச ஜனங்களை பொல்லாத பிசாசனவன் பாவத்திலும், சாபத்திலும் அடிமைப்படுத்தி வைத்திருக்கிறான் என்பதை நாம் தினந்தோறும் செய்திகள் மூலம் கேள்விப்படுகிறோம். ஆனால் இதற்காக வைராக்கியமாக ஜெபிக்கிறோமா? செயல்படுகிறோமா? என்பதை சிந்தித்து பாருங்கள். நாம் கர்த்தருக்காக வைராக்கியம் பாராட்டி, அவருக்காக ஒரு அடி எடுத்து வைக்கும் போது தேவன் நமக்காக பல அடிகளை எடுத்து வைப்பார்.

**"என் சத்துருக்களைப் பின்தொடர்ந்து அவர்களைப் பிடிப்பேன்; அவர்களை நிர்மூலமாக்கும் வரைக்கும் திரும்பேன்" (சங்கீதம் 18:37).**

**அன்பான வாலிபர்களே! பரலோகமே எதிர்பார்க்கும் மாபெரும் உலக எழுப்புதல் சீக்கிரம் வரபோகிறது. அந்த எழுப்புதலில் நாம் பயன்பட, நம் பார்வையை தேவன் மேல் வைத்து, நம் விசுவாசத்தை உறுதிப்படுத்திக் கொண்டு, கர்த்தருக்காக எழும்புவோமானால் நாம் தேவனுக்காக பெரிய காரியங்களை செய்யவும், திரளான ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தவும் முடியும்.**

# செய்திகள்!

## 3 ஆண்டுகளில் 13.13 லட்சம் பெண்கள், சிறுமிகள் மாயம்! நாடாளுமன்றத்தில் அரசு தகவல்!

நாடு முழுவதும் கடந்த 3 ஆண்டுகளில் பெண்கள், சிறுமிகள் என மொத்தம் 13.13 லட்சம் பேர் காணாமல் போயுள்ளதாக ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் உள்துறை அமைச்சகம் அளித்த தகவலின்படி, கடந்த 2019 முதல் 2021ம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில், தேசிய குற்ற ஆவண காப்பக தரவுகளின் அடிப்படையில், நாடு முழுவதும் 18 வயதுக்கு மேற்பட்ட 10 லட்சத்து 61 ஆயிரத்து 648 பேரும், 18 வயதுக்கு உட்பட்ட 2 லட்சத்து 51 ஆயிரத்து 430 சிறுமிகளும் காணாமல் போனதாக கூறப்பட்டுள்ளது. மொத்தம் 13.13 லட்சம் பெண்கள் மாயமாகி உள்ளனர்.

இதில், மத்திய பிரதேசத்தில் அதிகபட்சமாக பெண்கள், சிறுமிகள் என 1,98,414 பேரும், மேற்கு வங்கத்தில் 1,93,511, மகாராஷ்டிராவில் 1,91,433 பேரும் காணாமல் போயுள்ளனர். யூனியன் பிரதேசங்களில் அதிகபட்சமாக டெல்லியில் 61,054 பெண்கள் மற்றும் 22,919 சிறுமிகளும், ஜம்மு காஷ்மீரில் 8,617 பெண்கள், 1,148 சிறுமிகள் இதே கால கட்டத்தில் காணாமல் போய் இருக்கின்றனர் என்று தெரிவித்தது.

மேலும், நாடு முழுவதும் பெண்களின் பாதுகாப்புக்காக அரசு பல்வேறு முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் உள்துறை அமைச்சகம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தது. **– தினகரன், 31 ஜூலை 2023.**

## பிஎப் வட்டி விகிதம் 8.15% ஆக அதிகரிப்பு!




2022-23ம் நிதியாண்டிற்கான இபிஎப் (EPF) டெபாசிட்டுக்கான வட்டி விகிதத்தை 8.10 சதவீதத்தில் இருந்து 8.15 சதவீதமாக அதிகரிப்பதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மார்ச் 28ம் தேதி ஓய்வூதிய நிதி அமைப்பான தொழிலாளர் வருங்கால வைப்புநிதி ஆணையமானது, 2022-23ம் நிதியாண்டிற்கான பிஎப் வட்டி விகிதத்தை 8.10 சதவீதத்தில் இருந்து 8.15 சதவீதமாக உயர்த்துவதற்கு ஒன்றிய அரசுக்கு பரிந்துரை செய்தது.

இந்நிலையில் இபிஎப்ஓவின் (EPFO) பரிந்துரையை ஒன்றிய நிதி அமைச்சகம் ஏற்றுக் கொண்டு ஒப்புதல் வழங்கியுள்ளது. இது குறித்து அதிகாரப்பூர்வ அரசாணை நேற்று வெளியிடப்பட்டது. இதில் நாடு முழுவதும் இபி எப் ஓ வில் (EPFO) இணைந்துள்ள 6 கோடி ஊழியர்களின் இபிஎப் (EPF) கணக்கு வட்டி விகிதமானது, 8.15 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனை உறுப்பினர்களின் கணக்குகளில் வரவு வைக்குமாறு அலுவலகங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது. **– தினகரன், 25 ஜூலை 2023.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

# முழு இரவு ஜெபம்!

**திருச்சி, கரூர், காரைக்குடி மற்றும் பொள்ளாச்சி**

தேவன் கொடுத்த திட்டத்தின்படி, வாலிபர் எழுப்புதல் முழு இரவு ஜெபம் ஜுன் மாதம் திருச்சி மற்றும் கரூர் மாவட்டங்களிலும், ஜுலை மாதம் காரைக்குடியிலும் நடத்த தேவன் கிருபை செய்தார். முழு இரவும் மன்றாடி ஜெபிப்பதற்கு சுமார் **670** வாலிபர்கள் மற்றும் பெரியவர்கள் கூடி வந்தனர். திருச்சி, கரூர், காரைக்குடி மற்றும் பொள்ளாச்சி பகுதிகளில் தேவன் ஜெப அபிஷேகத்தை அளவில்லாமல் ஊற்றினார். வந்திருந்த ஜனங்கள் தங்களுடைய மாவட்டங்களின் எழுப்புதலுக்காக கண்ணீரோடு மன்றாடி ஜெபித்தனர். **45,000** கைப்பிரதிகள் பெற்று சென்றனர். சகோதரர் அவினாஷ், சகோதரர் சதீஷ் குமார் மற்றும் தேவ ஊழியர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தினார். பாடல், ஆராதனை மற்றும் ஜெப நேரங்களில் ஆவியானவர் இறங்கி கிரியை செய்தார். இந்த ஜெபத்திற்கு பின்பு வாலிபர்கள் மத்தியில் தேவன் ஜெப ஆவியை ஊற்றி, மன்றாடி ஜெபிக்கும் பாரத்தைக் கொடுத்திருக்கிறார். தேவனுக்கே மகிமை!













Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 08 -2023
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

# MOUNT Sinai 2023

(வாலிபர்கள் ஒருநாள் உபவாசக் கூடுகை)

நாள்:
## நவம்பர் 11
(சனிக்கிழமை)

நேரம் :
## காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

| | | |
|---|---|---|
| சென்னை | : | சகோ. வெஸ்லி மேக்ஸ்வெல் |
| திருவள்ளூர் | : | பாஸ்டர் சரவணன் |
| காஞ்சிபுரம் | : | சகோ. லூகாஸ் சேகர் |
| வேலூர் | : | சகோதரி ஆஷ்லி |
| பேர்ணாம்பட | : | சகோ. தினகரன் |
| விழுப்புரம் | : | சகோ. பொற்செல்வன் ஆசீர் |
| இராணிப்பேட்டை | : | சகோ. இராபர்ட் |
| கடலூர் | : | சகோ. ஜெபசிங் |
| பெரம்பலூர் | : | சகோ. மைக்கேல் |
| சேலம் | : | சகோ. குரூஸ் மாசிலாமணி |
| கிருஷ்ணகிரி | : | சகோ. சதீஷ் குமார் |
| நாமக்கல் | : | பாஸ்டர். காட்சன் |
| ஈரோடு | : | டாக்டர் அன்புராஜன் |
| திருப்பூர் | : | சகோ. அவினாஷ் |
| கோவை | : | பாஸ்டர் பென்ஸ் |
| நீல்கிரி | : | சகோ. ஜோசப் |
| கரூர் | : | சகோ. ஜெபஸ்டின் |
| திருச்சி | : | சகோ. ஹெயின் வெஸ்லி |
| திருவாரூர் | : | சகோ. மேஷாக் |
| தஞ்சாவூர் | : | சகோ. ஜெயகாந்த் |

தொடர்புக்கு: 9442885315 I 9488475315 I 9750955548 I 9791444788 I 9489775075

| | | |
|---|---|---|
| நாகப்பட்டினம் | : | சகோ. இராபர்ட் வால்டர் |
| புதுக்கோட்டை | : | சகோ. ஜெயசீலன் |
| திண்டுக்கல் | : | சகோ. டேவிட் கணேசன் |
| தேனி | : | சகோதரி அனிதா பானு & சகோதரி வசந்தி |
| மதுரை | : | சகோ. ஜான் வெஸ்லி |
| விருதுநகர் | : | சகோ. ஜான் கே |
| ராமநாதபுரம் | : | பாஸ்டர் சஜின் |
| ஜெபமலை | : | சகோதரி செல்லராணி அப்பாதுரை |
| திருநெல்வேலி | : | சகோ. ஞானேஷ் |
| நாலுமாவடி | : | சகோ. அந்தோணி தாஸ் & சகோ. சார்லஸ் |
| சங்கரன்கோயில் | : | சகோ. சுதர்சன் |
| நாகர்கோயில் | : | சகோ. ராஜேந்திரன் |
| பாண்டிச்சேரி | : | சகோ. டேவிட் ஜெபசிங் |
| சித்தூர் | : | சகோ. சாம் ஜெபராஜ் |
| புத்தூர் | : | சகோ. பிரவீன் |
| மும்பை | : | சகோ. ஜான் கிளிட்டஸ் & சகோ. டேனியல் ராஜ் |

வாலிபர்களே! உங்கள் பகுதியில் நடைபெறும் உபவாச கூடுகையில் (36 இடங்களில்) கலந்துகொண்டு தேசத்தின் எழுப்புதலுக்காக திறப்பிலே நின்று ஜெபிக்க வாரீர்...